பொன்மொழிகள்

தலைவர் பெரியார்
ஈ. வெ. ரா. அவர்கள்
அனுமதி—
அங்கீகாரத்துடன்
வெளியிடப்பெற்றது.

திராவிடமணி பதிப்பகம்
தெப்பக்குளம் :: திருச்சிராப்பள்ளி

முதற்பதிப்பு ஜூன் 1949

பதிப்புரிமை

விலை 0—14—0

அட்டவணை

		பக்கம்
அரசியல்	...	1
மதம்	....	8
கடவுள்	...	19
சமுதாயம்	....	25
இயக்கம்	...	30
காங்கிரஸ்	...	39
ஆட்சி	....	42
மொழி	....	48
திருக்குறள்	....	52
திராவிட கழகம்	....	57
தீண்டாமை	...	60
பகுத்தறிவு	....	62
சீர்திருத்தம்	....	65
பொருளாதாரம்	....	68
ஆரியம்	...	71

அரசியல்

அரசியலில் முஸ்லிம்கள் நம்மவர்களைப் போலவே எவ்வளவு காரணங்கள் அடித்தாலும், இனத்தில்–இனப் பண்புகளில், தங்களை திராவிடர்கள் அல்ல என்று எந்த நல்ல முஸ்லிமும் சொல்லமாட்டார்கள்.

*

"எப்போதுமே நீங்கள் இந்தப் பதவிகளைப்பற்றிக் கவலைப்பட மாட்டீர்களா?" என்று நீங்கள் கேட்கலாம். கவலைப்படுவோம்: இப்போதல்ல; ஒரு காலத்தில். எந்தக் காலத்தில்? பதவியில் உட்கார்ந்ததும், "இனி இந் நாட்டில் பிராமணர்கள் இல்லை; சூத்திரர்கள் இல்லை–பார்ப்பான் பறையன் இல்லை" என்று உத்தரவு பிறப் பிக்கக்கூடிய அளவுக்கு நமக்கு ஆதிக்கம் கிட்டும் என்று தெரியும் காலத்தில். அதுவரை நாம் பதவிகளைத் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டோம். அவை யெல்லாம் நாம் துப்பிய தம்பலங்கள்தான். பதவி மோகம் எவ்வளவு பேர் களை அயோக்கியர்களாக – நாணயமற்றவர்களாக ஆக்கி வருகிறதென்பது எங்களுக்குத் தெரியும்.

இன்றுள்ள நிலையில் எந்த பொதுஜனத் தொண்டனும், எந்த பொதுநல வாதியும், எந்த சமூகவாதியும் சட்டசபைப் பக்கம் எட்டிக்கூடப் பார்க்கமாட்டான். வெறும் அரசியல் வாதிகள் சமூகத்தைப்பற்றியோ, நாட்டைப்பற்றியோ, ஒரு சிறிதும் கவலை இல்லாத சுத்த சுயநல வாதிகள் இவர்கள்தான் சட்டசபைப் பதவிகளைச் சூழ்ந்து நிரவார்கள்; பதவியிலுள்ளவர்களுக்குப் பின் பாட்டுப் பாடுவார்கள். உண்மைச் சீர்திருத்தவாதி எவனும் இன்றைய அரசியல் அரங்கை ஆதரிக்கமாட்டான்.

*

அரசியல் பதவிகளைத் தம் சுயநலத்திற்காகப் பயன் படுத்திக்கொண்ட ஆட்களைத் தெரிந்தெடுத் தனுப்பிய மக்கள், புத்தியுள்ள மக்களென்று நம்மால் எப்படி ஒப்புக் கொள்ள முடியும்?

*

நல்ல ஆட்கள் பதவிக்கு வர முடியவில்லை யென்றால், பதவிக்குத் தேர்ந்தெடுத்தனுப்பும் ஓட்டர்களுக்குப் புத்தியில்லை; அல்லது புத்தியுள்ள மக்களுக்கு ஓட்டுரிமை இல்லை என்று தானே அர்த்தம்.

*

இந் நாட்டு அரசியலும் கைத்தொழிலும் வடநாட்டான் கையில் சிக்கி சீரழியக் கூடாது என்றால், அதற்காக தேசியத் தோழர் நம்மீது சீறி விழுவானேன்? இந் நாட்டில் வடநாட்டான் ஆதிக்கம் இல்லை யென்றுவது எந்த புத்திசாலியாவது கூறமுடியுமா? சென்ற 30 ஆண்டுகளாக நாட்டு விடுதலைக்காகப் போராடியது, கடைசியில் வடநாட்டானுக்கு அடிமைப்பட்டு சீர்கேடு அடையவா?

எங்கள் மாகாணத்தவர் வறுமையால் வாடி வதைய, வடநாட்டவர் இங்கு ஏழடுக்கு மாடி வீட்டில் வாழப் பார்த்திருக்க முடியாது என்று தானே நாங்கள் கூறுகிறோம். வியாபாரம், கைத்தொழில், எதிலும் அந்நியர்கள் சம்மந்தம் வடநாட்டவர் சம்மந்தம் இருக்கக்கூடாது என்பதுதானே நாங்கள் கோருவது.

*

உடுத்திக்கொள்ளத் துணியில்லை; குடியிருக்க வீடில்லை; படிக்கப் பள்ளி யில்லை; உயிர் வாழ்வுக்குப் பாதுகாப்பில்லை. எங்கும் கொள்ளை, கொலை, திருட்டு, 144. இப்படிப்பட்ட ராஜ்யத்தை எப்படி சுயராஜ்யம் என்று ஒப்புக் கொள்ள மனந்துணியும்? நாங்கள் கேட்கும் சுயராஜ்யம் இது வல்லவே. சூத்திரனில்லாத சுயராஜ்ய மன்றே—சூரண்டலற்ற சுயராஜ்யமன்றே நாங்கள் கேட்கின்றோம்.

*

பட்டம் பதவி சம்பாத்தியம் இவையெல்லாம் ஒருதலை முறைக்குத்தானே நிலைக்கும். அதன் பிறகு உன் சந்ததி யார்கள் கதி என்னவது?

*

மானத்தை விற்று, மனிதத்தன்மையை இழந்து, வாழ்ந்து தீரவேண்டிய அளவு சோம்பேறிகளும்—கோழைகளுமானவர்களுக்குத் "தேசம் பெரிது" என்கின்ற சாக்கு ஒரு உற்ற தோழனு யிருந்து வருகிறது.

*

அரசியலின் மூலம் பெருமை பெற்று, பணம் கீர்த்தி பதவி முதலியன சம்பாதிக்கக் கருதும் ஒரு கூட்ட மக்கள் மனித சமூகத்துக்கு க்ஷயரோகம் போன்றவர்கள்.

எக் காரணத்தை முன்னிட்டாவது எப்போதாவது இந்தியா வகுப்புவாதம் இல்லாமல் இருந்ததாகக் குறிப்பிடுவதற்கு ஆதாரமில்லை.

*

இந் நாட்டிற்கு வேண்டியது மக்களை ஒழுக்கத் துறையில்—நாணயத் துறையில்—தன்னல மறுப்புத் துறையில், அன்புத் துறையில் செலுத்துவதற் கேற்ற நெறிகளும் திட்டங்களுமே யாகும்.

*

நம் நாட்டில் அறியாமையை வளர்த்து அதன் பலத்தாலே அரசியல் ஆதிக்கம் பெற்றவர்களுக்கும் அறிவுக்கும் எப்படித் தொடர்பு இருக்கமுடியும்?

*

மதச் சார்பற்ற சர்க்கார் என வெளி யுலகம் மதிக்கக் கூறிக்கொண்டிருந்தாலும், மத சம்பிரதாயப்படி ஹோமம்—பூசை—தீபாராதனை செய்துதான் கப்பல் விடப் பட்டது. சுயராஜ்யம்கூட மதப்படி நல்ல நேரம் பார்த்து புகுத்தப்பட்டது.

*

காந்தியார் சென்ற வழிக்கு நானே, என்னைச் சார்ந்த சிலரோ சென்றுவிட்ட பிறகாவது நம் மக்களுக்கு மான ரோஷம் வராதா என்று கூட சில சமயங்களில் என் மனம் பதறுகிறது.

*

நாட்டுக்கு உண்மையான விடுதலை வேண்டுமானால், மதம்—அரசாங்கம்—பிரபுத்துவம் ஆகிய மூன்று துறைகளிலும், பெரும் புரட்சி ஏற்பட்டால்தான் முடியுமே யல்லாமல், வெறும் அரசியலைப்பற்றி மட்டும் கூச்சல் போடுவ

தாலும், அரசியல் ஆதிக்கத்தின்மீது மட்டும் கண்மூடிக் கொண்டு குறைகூறுவதாலும் ஒரு காரியமும் நடந்து விடாது.

*

இன்று இந்நாட்டு மக்கள் உள்ள நிலையில் ஜனநாயகம் என்பது வெறும் ஏமாற்று வார்த்தை. ஏனெனில், 100-க்கு 90 பேர் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள். ஜனநாயகம் இன்று நல்ல காரியங்களுக்குப் பயன்படாது.

*

தங்கள் மனதுக்கு நேர்மையானவர்–யோக்யமானவர், இந்த வேலையிலல் பிழைக்க வேண்டியவரல்ல, ஏழை மக்களுக்கு நன்மை செய்ய கூலி–தரகு–லஞ்சம்–மாமூல் எதுவும் கேட்பவரல்ல, பணம் சேர்க்கிற வேலை அல்லாமல் பொதுவேலை பார்க்க வசதி–தகுதி–புத்தி உள்ளவர் என்று ஓட்டர்கள் திருப்தி செய்துகொண்டு ஓட்டுச் செய்யவேண்டும்.

*

மக்கள் வரிப்பணத்திலிருந்து 10½ கோடி ரூபாய் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதன்மூலம் சில பணக்காரப் பிள்ளைகள் படித்து, ஆக்கம் பெறும் வகையில் கல்விமுறையும் கல்லூரிகளும் இருக்கின்றனவேயன்றி; வரிகொடுக்கும் கிராமங்களிலுள்ள வரிகொடுப்போரின் பிள்ளைகளும்–பாட்டாளி மக்களின் பிள்ளைகளும் கல்வி பயிலும் தன்மையில் இருக்கிறதா?

*

சுயராஜ்யம் வந்துவிட்டதாகக் கும்மாளம் அடிக்கிறீயே? இந்த சுயராஜ்யம் உனக்கா? வடநாட்டானுக்கா? உனக்கா–முதலாளிக்கா? உனக்கா–கள்ள

மார்க்கெட்காரனுக்கா? தொழிலாளிக்கா—அவன் ரத்தத்தை உறிஞ்சுபவனுக்கா?

*

சுயராஜ்யம் என்றால் என்ன? உண்ண உணவும்—உடுக்க உடையும்—இருக்க இடமும்—அதற்கான அறிவும் தானே தாண்டவமாடவேண்டும்? இன்று அந்நிலை இருக்கிறதென்று எவராவது கூறமுடியுமா?

*

மந்திரிகளுக்குத்தான் என்ன மதிப்பிருக்கிறது? வடநாட்டான் சொல்வதுபோல வாலியாட்டும் பரிதாபநிலை தானே இவர்களுக்கு? இவர்கள் பதவிகளை யார் மதிக்கிறார்கள்? இவர்கள் மனசாட்சியே இவர்கள் பதவியை மதிக்க முடியாதே!

*

வகுப்புவாதம் கூடாதென்று கூறும் சர்க்கார்; நாமம் போட்டால், இரண்டாண்டு கடுங்காவல்—பஞ்சகச்சம் கட்டினால் எட்டாண்டு கடுங்காவல்—பூனூல் அணிந்தால் ஜென்மதண்டனை என்று சட்டம் செய்திருக்க வேண்டாமா? இந்த அடையாளங்கள்தானே வகுப்புவாதம் உண்டாக்குகிறது. வகுப்புபேதம் ஒழிக்கும் சர்க்கார் போலீஸ்காரனிடம் கத்தரிக்கோல் கொடுத்து, பூனூலையும்—உச்சிக் குடுமியையும் கத்தரிக்கச் சொல்ல வேண்டாமா? இன்றைய சர்க்கார் வகுப்புவாத மற்றது என்று சொல்லிக்கொண்டு பூனூல் போட—மந்திரம் ஜெபிக்க—விரதமிருக்க, கிருஷ்ணன் பிறக்க ஒவ்வொரு நாள் லீவு என்றால், இது முழுக்க முழுக்க பார்ப்பன வகுப்பு வாத பிரசார சர்க்கார்தானே?

வள்ளுவன் பிறந்த நாள் எங்கே? கபிலன் பிறந்த நாள் எங்கே? ஔவை பிறந்த நாள் எங்கே? ராமன்—கிருஷ்ணன்—வரலட்சுமியைவிட, இவர்கள் எந்த வகையில் கேடு கெட்டவர்கள்? அவர்கள் லீவுக்கு மூன்று நாள் நாசமானதும், பல லட்ச ரூபாய் பெறுமானமுள்ள சேவை நாசமானதும், இந்த லீவுகள் நம்மை அவமானப் படுத்துவதாக யில்லையா?

மதம்

கீழ்ஜாதி—மேல்ஜாதி என்பதை ஆராய்ந்தால்; சோம் பேறியாயிருந்து ஊரார் உழைப்பில் வாழ்பவன் மேல்ஜாதி என்றும், பாடுபட்டு உழைத்து பலனை அந்நியனுக்கு அழுது விட்டு, வீடில்லாமல் தணியில்லாமல் கஞ்சி யில்லா மல் கல்வியில்லாமல் மிருகத்திலும் கேவலமாக வாழ்கிற வன் கீழ்ஜாதி என்றும் புலனாகும்.

*

மதக் கட்டளைகளையும் கடவுள் நம்பிக்கையையும் கொண்ட அடிமை ஒருநாளும் விடுதலையடைய முடியாது.

*

மனிதன் செத்துவிட்டானால், பிறகு அவனுக்கு எவ்வித சம்மந்தமும் - தொடர்பும், உலகிலோ - வேறெங் கிலுமோ கிடையாது.

*

சரீரத்துள்ள உருப்புக்கள் - உருப்புக்களின் அமைப் புக்கள் - அமைப்புக்களினால் எற்படும் செய்கைகள் ஆகிய வற்றிற்கு அன்னிதான ஆத்மா என்றோ, ஜீவன் என்றோ, வஸ்துக்கள் இருப்பதாக இல்லை.

மத சம்மந்தமான ஆதாரங்களில் காணப்படும் மோட்சத்திற்கும் முக்திக்கும் சொல்லப்படும் கருத்தெல்லாம்; கவலையும் துக்கமும் அற்ற தன்மையென்பதல்லாமல், வேறு ஒரு லோகத்தில் போய் சதா வெல்வெட்டு மெத்தையில் தூங்கிக் கொண்டிருப்பது என்பதல்ல.

*

'தர்மராஜ்யம்', 'ராமராஜ்யம்', 'சத்யகீர்த்தி ராஜ்யம்' என்று சொல்லப்படும் அந்தக் காலங்களிலும், இன்றிருக்கும் அதர்மம் - அநீதி - கஷ்டம் - தரித்திரம் - அடிமை இருந்து வந்திருப்பதாக, சரித்திர - சாஸ்திர - புராணங்களில் தாராளமாய்க் காணப்படுகிறது.

*

உலகில் மதங்கள் ஏற்பட்டு பல்லாயிரக் கணக்கான வருஷங்கள் ஆகியிருந்தாலும், மதக் கட்டளைகள் தெய்வங்களாலேயே மூல புருஷர்களால் உலகிற்கு இறக்கப்பட்டது என்றிருந்தாலும்; சதாசர்வ காலமும் அந்தந்த மதப் பிரசாரம் செய்யப்படா விட்டால், மதம் ஒழிந்துவிடும் என்ற பயம் எல்லா மதஸ்தரிடமும் இருந்துதான் வருகிறது.

*

மதங்களுக்கு ஜீவநாடியாயிருப்பது பணமும் பிரசாரமுமல்லாமல், அவற்றின் தெய்வீகத் தன்மையோ உயர்ந்த குணமோ என்று எதையும் சொல்லமுடியாது.

*

தன்னை ஒரு மதக்காரன் என்று காட்டிக்கொள்ள, மதக்குருக்கள் - கர்த்தாக்கள் - பிரசாரகர்கள் எப்படி

நடந்தால் மதபக்தி யுடையவன் என்று சொல்லு வார்களோ, அப்படியே நடக்கத்தான் ஒவ்வொரு மதக்காரனும் ஆசைப்படுவான்.

*

மதம் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது; சைன்சுக்கும் மதத்துக்கும் சம்மந்தம் பார்க்கக் கூடாது; பகுத்தறிவு வேறு, மதம் வேறு; ரிஷிமூலம் நதிமூலம் பார்க்கக்கூடாது என்பது போன்று எல்லா மதக்காரர் களும் சொல்லி விடுவதால், உலகில் எந்த மூடனும் எதையும் சொல்லித் தப்பிக்கலாம் என்ற தைரியத்தின்மீதே, மதத்தின் ஆபாசங்கள் உலகில் நிலைத்து வருகிறது.

*

உலகில் எந்த தேசத்திலும் இல்லாத அளவு இந்தியாவில், மதங்களும் மதவேற்றுமைகளும், மத மாற்றங்களும் தாண்டவமாடக் காரணம்; இந்திய மக்களின் கல்வியறிவு வாசனையற்ற தன்மையும் - பாமரத் தன்மையும் - அடிமைத் தன்மையுமே யன்றி. வேறல்ல.

*

எல்லா மதத்துக்கும் ஒரு கடவுள், ஒரு மேல் லோகம், ஒரு மோட்ச நரகம், ஒரு ஆத்மா, செத்தபிறகு ஆத்மா நன்மை தீமைக்குத் தக்கபடி மோட்ச நரகம் அனுப விப்பது, என்ற கருத்துக்களில் வித்தியாச மிருக்காது.

*

ஒரு மதமாவது, என் கடவுள் கண்ணுக்குத் தெரியக் கூடியது என்றோ, என் வேதமானது மக்கள் எல்லோரும்

ஏற்கக்கூடியதாய் - அல்லது ஏற்று நடக்கக்கூடியதாய்ச் சக்தியுடையது என்றே, சொல்ல யோக்யதையுடையதாகயில்லை.

*

மனிதனுக்கு அறிவும், பிரத்தியட்ச அனுபவமும், பஞ்சேந்திரிய உணர்ச்சியின் பலாபலனும் இருக்கும் போது; இவைகளை லட்சியம் செய்யாமல் மாறுபட்டதான மதம் எனபது உலகிற்குத் தேவையில்லை.

*

தமிழ்ப் பாஷையைக் கற்றுப் பண்டிதரானவர்கள் 100-க்கு 99 பேர் மதவாதிகளாகவும், தமிழில் மதத்தைக் காண்கிறவர்களாகவும் இருப்பதுடன், தங்கள் புத்தியை மதத்துக்குப் பறிகொடுத்து, மதக்கண்ணால் தமிழைப் பார்க்கின்றவர்களாகவே யிருக்கின்றார்கள்.

*

மேல் நாட்டுப் பண்டிதர்களில் பெரும்பாலோர் தங்கள் பாண்டித்தியத்தில் சிறிதும் மதத்தைக் கலப்பதுமில்லை; மதநம்பிக்கையைப பிரயோகிப்பதுமில்லை.

*

மேல் நாட்டில் மதத்தைப் படிக்காமல் பண்டிதராகலாம்; கீழ் நாட்டிலோ மதத்தைப் படித்தால்தான் பண்டிதராகலாம்.

*

முன்னேற்றம் மாறுதல் என்பவைகள் காலதேச வர்த்தமானத்தையும், அன்று உள்ள அறிவு விருத்தியையும்

பொருத்ததே ஒழிய, மதவெறியர்கள் சொல்வதுபோன்ற தீர்க்க தரிசனத்தைப் பொருத்ததல்ல.

*

எவ்வளவு மதவெறியனும் இன்றைய வாழ்க்கையில் மாற்ற மடைந்து கொண்டு - மாற்றத்தை ஏற்றுக் கொண்டும்தான் வருகின்றனே ஒழிய; வெறும் தெய்வீகத்துக்கு மாறுபட்டதென்றே, தத்துவங்களுக்கு மாறுபட்ட தென்றே கருதி எதையும் விட்டு விட்டு காட்டுக்கு ஓடிப்போகவில்லை.

*

பழக்க வழக்கங்களில் ஆரியர்களுக்கும், தமிழர்களுக்கும் இருக்கும் வித்தியாசங்களிலும் - வேற்றுமைகளிலும் பிரிவினைகளிலும் 100ல் ஒரு பாகம் கூட இஸ்லாமியர்களுக்கும் தமிழர்களுக்கும் இல்லை.

*

மண விஷயத்தில் ஆரிய மதக்கொடுமையில் 100ல் ஒரு பங்குகூட இஸ்லாம் மதத்தில் இருப்பதாய்ச் சொல்ல முடியாது.

*

உலக முழுவதிலும் உள்ள மக்கள் சமூகம் எல்லாம் ஒரே கூட்டத்துக்குள் வரவேண்டுமென்பதில், ஆரியர்கள் மதம் என்பது ஒன்றைத் தவிர, உலகில் வேறு எந்த மதக்காரனுக்கும் ஆட்சேபனை இருக்க முடியாது.

*

பார்ப்பனர் தம் புராணங்களைக் கொண்டு நம்மைச் சூத்திரர் ஆக்கினர். அவர்கள் மதத்துக்கு ஆட்பட்டுக்

கோவில்கட்டி, குளம்வெட்டி,சொத்து அளித்ததெல்லாம் நாம்; அதனல் சுகவாழ்வு அனுபவிப்பது அவர்கள்.

*

நம்மைச் சூத்திரப் பட்டத்தின் மூலம் என்றும் அடிமை மக்களாக இருக்கும்படி பார்ப்பனர் செய்த தந்திரமே மதம். அது நிலைக்க பாதுகாப்புக்காக பார்ப்பனர் ஏற்படுத்திக் கொண்டதே கோவில்களும் கடவுள்களும்.

*

ஒன்று மதம் ஒழிய வேண்டும். அல்லது நாம் மதத்திலிருந்து விலகவேண்டும். மதத்திலிருந்து விலகுவதென்றல் ஒரு பெரிய காரியமல்ல. சூட்டுக்கொள்வதல்ல, அல்லது வேப்பெண்ணெய் சாப்பிடுவதல்ல. இவர்கள் ஏற்படுத்தியிருக்கும் மதத்திலிருக்கிற சில ஆபாசங்களை ஒழித்து, நமக்கான - பொதுவான - மக்களுக்கு உபயோகமான மதத்தை ஏற்றுக்கொள்வதுதான்.

*

பிரபுக்களுக்கும் - படித்தவர்களுக்கும் - வியாபாரிகளுக்கும் - புரோகிதக் கூட்டத்தாருக்கும், ஜாதி மதம் பழக்க வழக்கம் சாஸ்திரம் கடவுள் கட்டளை ஆகியவற்றின் பேரால் யாதொரு கஷ்டமும் இல்லை; இவற்றால் அவர்கள் லாபமும் மேன்மையுமே அடைந்து வருகிறார்கள்.

*

நமது மதமென்பதோ, வேதமென்பதோ, சாமிகள் என்பதோ, சமீபகாலத்தில் ஏற்பட்டதாகச் சொல்வதற்கில்லை.

சைவ மதம் என்றால் என்ன? அது பார்ப்பனமதம் அல்லாமல் வேறு தனிமதம் என்றே, அல்லது தமிழ்மக்கள் மதம் என்றே யாராவது சொல்லமுடியுமா?

*

கந்தபுராணம், சிவமகாபுராணம் முதலாகிய புராண நூல்களை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால், சிவனுக்கோ, சைவத்திற்கோ எதாவது கடுகளவு இடமிருக்கின்றதா?

*

வேதத்தையும் வேள்வியையும் தள்ளிவிட்டு, அவற்றைக் காப்பாற்ற வந்த கடவுள்களையும் தள்ளிவிட்டு ஆரியர்களால் புனையப்பட்டது என்கிற புராணங்களையும் தள்ளிவிட்டால்; தேவாரத்திற்கோ மற்றும் தமிழ் மறைக்கோ எங்காவது இடமிருக்கிறதா?

*

சமயம் என்பதும் வைணவம் என்பதும் சைவம் என்பதும் என்ன வென்று பொதுவாக யோசிக்கு மிடத்தில் பார்ப்பனர்களுக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு தங்களை அறியாமல் பார்ப்பனீயத்துக்கும் பார்ப்பன ஆதிக்கத்திற்கும் உழைக்கும் சாதனங்களேயன்றி வேறில்லை.

*

இந்துமதம்-கலை-ஆசாரம் காக்கப்பட்டால் அழுலுக்கு வந்தால் அதன் பலன் என்னவாகும் என்றால், அதன்படி பார்ப்பனர் பிராமணராவர்; திராவிடன் சூத்திரனும் பஞ்சமனும் ஆவான்.

உண்மையில் இன்று வர்ணாசிரம தர்மத்துக்கு வர்ணத்தில் உயர்ந்தவர்கள் என்பவர்களிடத்திலேயே மதிப்பில்லாமல் போய்விட்டது.

*

இந்த நாடு வர்ண தர்மத்தால் கெட்டுவிட்டது என்று காட்டுவதற்கு அநேக எடுத்துக்காட்டுகள் இருக்கின்றன.

*

தமிழரசர்கள் ஒருவரிடமாவது தன்மானம் இருந்தது என்று காட்டப் போதிய ஆதாரமில்லை. தமிழரசன் ஒருவனுவது நான் வன் சூத்திரன் என்று சிறிது சிந்தித்ததாகவும் ஆதாரம் கிடையாது.

*

இந்நாட்டை ஆண்ட மன்னர் சந்ததிகளான - இந்நாட்டுப் பழங்குடி மக்களான நாம் இன்று, நாலாம் ஜாதியாக கடையராக வன் இருக்கிறோம், வன் நடத்தப்படுகிறோம் என்றால், நம் முன்னோர்கள்-நம் அரசர்கள் நடந்துகொண்ட மானமற்ற தன்மையே ஒழிய, வேறு இல்லை.

*

மடாதிபதிகள் என்பவர்கள் பிடித்து வைத்த பிள்ளையார் ஆவார்கள். அவர்கள் செல்வம் போக போக்கியம் எல்லாம் திராவிடர்களுடையது. இந்த மடாதிபதிகள் ஒழுக்கமாய் மக்களுக்குப் பயன்படும்படி நடந்து கொள்ள வேண்டும் என்று சொல்லவும்,

அவர்களிடம் கொடுக்கப்பட்ட பணங்களுக்கு சரியான வரவு செலவு இருக்கவேண்டுமென்று சொல்லவும், கொடுத்தவர்களுக்கு உரிமையுண்டு.

*

பணம் கொடுத்த இனத்தைச் சேர்ந்தவர்கள் கணக்குக் கேட்க உரிமை வேண்டும் என்றால், வாங்கி வயிறு பிழைக்கும் இனத்தைச் சேர்ந்தவர்கள் கூடாது என்று என் சொல்ல வேண்டும்? எப்படிச் சொல்ல முடியும்?

*

மக்கள் யாவரும் ஒரே பிறப்பு. பார்ப்பான் ''பிராமணன்'' உயர்வு என்பதும், பறையன் ''பஞ்சமன்'' தாழ்வு என்பதுவும் மடமை – பித்தலாட்டம் அயோக்கியத்தனம்.

*

அன்பையும் சத்தியத்தையும் உதவி செய்வதையும், குணமாய் — நடத்தையாய்க் கொண்டதுதான் மதம். (நெறி). அதுவும் அப்படிப்பட்ட ஒரே மதம்தான் உலக முழுவதற்கும் உண்டு. மற்றக் காரியம் எதுவும் மதத்திற்குச் சம்மந்தப்பட்டதல்ல.

*

இந் நாட்டுப் பத்திரிகைகளும், பெரிய மனிதர்களென்று நாட்டு மக்களிடையே உலவிவரும் சில சிறுமை குணமுடையவர்களும் மதப்பிரசாரத்தின் மூலம், மக்களை மடையர்களாக்குகிறார்கள்.

திராவிடர்களுக்கு மதம் என்ற வார்த்தையே கிடையாது. ஆனலும், அரசியல் முதலிய காரியங்களுக்கு மதத்தின் பெயர் சொல்ல வேண்டுமானல், பகுத்தறிவு வாதி என்று சொல்லவேண்டும்.

*

இந்நாட்டிலுள்ள இன்றைய மதமும் அரசியலும் தான் காந்தியாரைக் கொன்றது என்பது ஞாபகமிருக்கட்டும். இவை அடியோடு மாற்றப் பட்டால் ஒழிய மக்கள் மக்களாய் வாழமுடியாது.

*

டவாலி பியூன்களெல்லாம் இன்று ஆகாய விமானத்தில் பறக்கும்போது, எல்லாம் வல்ல ஒரு சாண் சாமியை 200 டன் விறகின் மீது வைத்து, அதை 2000, 3000 ஆட்களைக் கொண்டு இழுக்கச் செய்து, தேரும் திருவிழாவும் நடத்தி பொது மக்கள் பணத்தைப் பாழாக்குவது மூடத்தனமல்லவா என்று கேட்டால், இதுவா நாஸ்திகம்? கடவுளின் பேரைக் கெடுக்கும் அவர்கள்தான் உண்மை நாஸ்திகர்க ளென்று உங்களுக்கு எச்சரிக்கை செய்வதுதான் எங்கள் வேலை.

*

நாஸ்திக விஷயத்தில் இப்போது ஆத்திரம் காட்டுபவர்கள் எல்லாம், மதப் பிரசாரத்தால் வாழலாம் எனக் கருதுபவர்களும் — மதப் பிரசாரத்தினல் வாழ்க்கை நடத்துபவர்களும் தவிர, மற்றவர்கட்கு அதைப்பற்றிக் கவலையே கிடையாது.

நாஸ்திகம் என்பது அறிவு வளர்ச்சியினலும், ஆராய்சித் திறனினலும், சுதந்தர உணர்ச்சியினலும் ஏற்பட வேண்டிய விஷயமே ஒழிய, கடவுள் சொன்னர் என்று புத்தகங்களைப் படிப்பதும், கடவுள் அவதாரம் என்று சொல்லிக் கொள்பவர்கட்கு அடிமையா யிருப்பதும், அவதாரர்கள் தீட்டும் ஏடுகளை ஆராய்ச்சி செய்வதும் ஆகியவைகளால் மக்களுக்கு விளங்கக் கூடிய காரிய மல்ல.

கடவுள்

நாம் கடவுளைக்கூட சும்மா விடவில்லையே. உனக்கேன் இவ்வளவு கோவில்கள்? கோபுரங்கள்? உனக்கேன் நாலுகால பூஜை? உனக்கேன் பெண்டாட்டி? உனக்கேன் கூத்திகள்? உனக்கேன் தங்கத்தாலும் வைரத்தாலும் நகைகள்? உனக்கேன் வேளாவேளைக்குச் சோறு? நீ சாப்பிடுகிறாயா? உனக்கென்று பொட்டுக் கட்டிக்கொள்ளும் தாசிகளைத்தான் நீ அனுபவிக்கிறாயா என்று கேட்கிறோமா இல்லையா? ஐயோ பாவம் அது சிவனே என்று இதையெல்லாம் கேட்டுக்கொண்டுதானே யிருக்கிறது. அதுகூட ஒன்றும் நம்மோடு சண்டைக்கு வருவதில்லையே.

*

வான முட்டும் கோபுரங்கள் கட்டியவர் யார்? அதன் உச்சிக் கெல்லாம் தங்கமுலாம் பூசியவர் யார்? தில்லை நடராசனுக்குத் தங்கக்கூரை வேய்ந்து தந்தவர் யார்? ஆங்காங்கு ஆயிரக்கால் மண்டபங்கள் எழுப்பித் தந்தவர் யார்? சத்திரம் சாவடி கட்டி வைத்தவர் யார்?

ஒரு பார்ப்பானுவது ஒரு செல்லாக் காசாவது, கோயில் - குளம் - தானதர்மம் இவற்றிற்குக் கொடுத்திருப் பானு? அப்படியிருக்க இவ்வளவு செய்தும் நாம் என் சூத்திரர்களாக இருக்க வேண்டும்? அவர்கள் மட்டும் என் ஒன்றும் செய்யாமலே நம்மை எமாற்றி உண்டு பிராமணர்களாய் வாழவேண்டும்? நாம் என் இன்று கடவுளையே குடுமியைப் பிடித்து ஆட்டுகிறோம்? என்? அதனால் நல்லது உண்டாகவில்லை. இது சாமியா, குழவிக் கல்லா என்றுகூட துணிந்து கேட்கிறோம். அது கட்டது கட்டபடியே நின்றுகொண்டிருக்கிறதே. "ஆம். உண்மை உண்மை" என்று ஒப்புக்கொள்ளும் தன்மையில். இப்படி எல்லாம் சொல்வதற்காக எந்த சாமியும் நம்மீது மான நஷ்ட வழக்குத் தொடரக் காணோமே.

*

மனிதனை மனிதனாக மதிக்கக்கூடிய மதத்தையோ, பிறவியினால் உயர்வு தாழ்வு கற்பிக்காத மதத்தையோ; காசு பணம் செலவு செய்துதான் தன்னை வணங்க வேண்டுமென்று கூறுத கடவுளையோ நாம் வேண்டா மென்று கூறவில்லை.

*

பாவாடை கட்டாத குழந்தை தெருமண்ணில் மூத்திரம் பெய்து, அதைக் கொட்டாங்கச்சியில் போட்டு கீழே தட்டி, இது இட்லி–இது சோறு–இது கறி–இது சாமி–இது சாமி பெண்டாட்டி என்று கூறி விளையாடுவது போல; குழவிக் கல்லையும் பித்தளைப் பொம்மையையும் வைத்துக் கொண்டு, இது சாமி – இது சாமி பெண்டாட்டி – இதுக்கு நாலுகால பூஜை செய்யவேண்டும் – இன்றைக்கு இந்தச் சாமிக்குக் கல்யாணம், பட்டுப்புடவை வேண்டும் என்

றெல்லாம் கூறி, நம் பணத்தைப் பிடுங்கித் தின்னும் பார்ப்பானையும்; அவனை அதற்கு அனுமதித்து வரும் குழவிக் கல்லையும் ஒழிக்கவேண்டு மென்றுதானே நாங்கள் ஆசைப் படுகிறோம்.

*

உலக மக்களெல்லாம் உருவமற்ற ஒரே கடவுளை, காசு பணம் செலவு செய்யாமல் அகத்தால் வணங்கி வரும் போது, நீ மட்டுமா குழவிக் கல்லில் போய் முட்டிக் கொள்ள வேண்டும்?

*

உயர்வு தாழ்வுகளை சமன்செய்து ஒற்றுமை உணர்ச்சியைத் தூண்டிவரும் கடவுளை வணங்குவதில் யாருக்குத் தான் தடையிருக்க முடியும்?

*

கடவுளின் பேரால் உங்களை மடமைக்கும் மூட நம்பிக்கைக்கும் ஆளாக்கி சோம்பேறி சுகவாழ்வு வாழும் பார்ப்பனர்களை — உங்களைத் தீண்டாதவர் என்று ஒதுக்கி வைத்து, உங்களுக்காக கடவுளிடம் விண்ணப்பம் செய்வதாகக் கூறி தரகு பெற்று வாழும் பார்ப்பனர்களை ஒரு போதும் நம்பி மோசம் போகாதீர்கள்.

*

இந்துக் கடவுள்கள் என்று சொல்லப்படுபவைகள் கூட முஸ்லிம் பெண்ணையும், தாழ்த்தப்பட்ட வகுப்புப் பெண்களையும் மணந்திருப்பதாக ஆஸ்திகர்களுக்கு ஆதாரங்கள் இருக்கின்றன.

பார்ப்பனர்கள் ஜாதி விஷயத்தில் எவ்வளவுதான் நமக்கு விட்டுக் கொடுத்தாலும், கிருஷ்ணனும் கீதையும் உள்ளவரை ஜாதியும் வருணமும் ஒழியவே ஒழியாது.

*

உலகத்தில் கடவுள் என்பது இன்னது என்பதாக மனதில் விபரப்படுத்திக் கொள்ளாமலேயே கடவுளைப் பற்றிய தர்க்கங்களும் தகராறுகளும் தினசரி நடைபெற்று வருகின்றன.

*

சேர — சோழ — பாண்டிய — நாயக்க மன்னர்கள் என் நாசமானார்கள் என்றால், நாட்டின் வளப்பத்தை — பொதுமக்களின் உழைப்பை, இப்படி கோயில், குளம், மண்டபம், கோபுரம், மதில், குளம் குட்டைகளில் செலவு செய்தால்; எவன்தான் நாசமாய்ப் போகாம லிருக்க முடியும்?

*

கடவுள் என்று சொல்லப்படுவது உயர்குணப் பண்பே ஒழிய, அது ஒரு உருவமல்ல; வஸ்துவல்ல.

*

கடவுள், உருவம் — குணம் அற்றவர் என்று என் சொல்லப்பட்டது என்றால்; அயோக்கியர்கள் கடவுளுக்கு தங்கள் இஷ்டம்போல் உருவம் — குணம் ஏற்படுத்தி, எதற்கு ஆக கடவுள் ஏற்பட்டதோ அந்தப்பலன் இல்லா மல் செய்துவிடுவார்களே என்பதற்காகத்தான்.

*

உருவம் — குணம் — பாவம் சக்தி கூட அறியமுடி யாத ஒரு கடவுளை, இந்தப் பார்ப்பனர்கள் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்காக, நாய் கழுதை படாதபாட்டைப்

படும்படி செய்து அறிவாளிகள் சிரிக்கும்படி உமிழும்படி செய்து விடுகிறார்கள்.

*

கொஞ்ச நேரத்துக்கு மாத்திரம் மக்களின்மேல் சாமி வருகிறது என்று சாமியாடும் தன்மையையும், மக்கள்மீது சாமி வரும்படி அழைக்கும் தன்மையையும் தடுக்க வேண்டும். குறைந்த அளவாவது கடவுளை அறிவுக்கு ஏற்றதாக சர்க்கார் செய்யவேண்டும்.

*

இங்கிலாந்திலே பறையன் — பார்ப்பான் சூத்திரன் இல்லை; ரஷ்யாவிலே வர்ணஸ்ரம — தலைவிதி இல்லை; பிர்மா முகத்தில் ஒருவனும் காலில் ஒருவனும் அமெரிக்காவிலே பிறப்பதில்லை. ஜெர்மனியிலே கடவுள் சோறு சாப்பிடுவ தில்லை. துருக்கியிலே கடவுள் திருமணம் செய்துகொள்வ தில்லை. பிரான்சிலே 12 லட்சம் ரூபாயில் கிரீடமில்லை. அந்நாட்டவர் மான ரோஷம் உள்ளவர்களாய் நாட்டு நலனைப் பாதுகாப்பதிலே அறிவு பெற்றவர்களாக யிருக்க, நமக்குத்தானே காட்டுமிராண்டித்தனக் கடவுளும் அதைக் காப்பாற்ற மதவெறியும்?

*

சர்வ சக்தியுள்ள கடவுள் என்பதை சாணி உருண்டை யாக ஆக்கி வைத்திருப்பது மகா மகா அயோக்கியத்தனம். குழவிக்கல்லாக ஆக்கி வைத்திருப்பது அதைவிட அயோக் கியத்தனம்.

*

கடவுளை நாம் உருவத்தால் கற்பித்துக்கொள்ளக் கூடாது. ஒழுக்கம் — யோக்யம்—விஞ்ஞான அறிவுடை யோராக கற்பித்துக்கொள்ள வேண்டும்.

கடவுள் என்று கல் சாமிகளைப் போற்றப் புகுந்ததன் பயனுகத்தான் நாட்டில் ஒழுக்கத்திற்கு இடம் இல்லாமற் போய்விட்டது. அன்புக்கு இடம் இல்லாமற் போய் விட்டது. மக்களும் மிருகப் பிராயத்தை நெருங்கி விட்டனர்.

*

சூத்திரப் பட்டத்தைக் கற்பித்து நிலை நாட்டிவரும் கடவுளை — அதற்கு ஆதாரமான புராண இதிகாசங்களை அழித் தொழியுங்கள். அன்பும் அறிவு மயமானதுமான கடவுளை வணங்குங்கள்.

*

கடவுளை வணங்குதல் என்றால் என்ன? தேங்காய் உடைத்து திருவிழா செய்து பார்ப்பானுக்கு தட்சணை கொடுத்து அவன் காலில் விழுவதல்ல; கோயில் கட்டுவ தல்ல, ஒழுக்கமாய் நடப்பதும், உயர்ந்த பண்புகள் கொள் வதுமே அன்பும் அறிவுமான கடவுளை வணங்குதல் என்ப தற்கு ஏற்றதாகும்.

சமுதாயம்

ஒரு காலத்தில் தமிழர் என்பது தமிழ் (திராவிட) பண்புகளுக்குரிய மக்களுக்குரிய பெயராக இருந்திருக்கக் கூடுமானாலும், இன்று அது மொழிப் பெயராக மாறி விட்டிருப்பதால், அம்மொழி பேசும் ஆரியப் பண்புடைய மக்கள் யாவரும், தாமும் தமிழர் என்று உரிமைபாராட்ட முன் வந்து விடுகிறார்கள். அதோடு ஆரியப் பண்பை நம் மீது சுமத்த அந்தச் சேர்க்கையைப் பயன் படுத்தி விடுகிறார்கள். அவர்களும் நாமும் ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால்தான் நாம்சூத்திரர்களாகிறோம்.

*

நமக்கு ரத்தத்தைப் பற்றிக் கவலை யில்லை. பண்பாடு களையும் நடப்புகளையும் பற்றித்தான் கவலை. வேற்றுமை யில்லாத மனித சமுதாயம் வேண்டு மென்பதுதான் நமது குறிக்கோளே ஒழிய, வேற்றுமை பாராட்டி யாரை யேனும் ஒதுக்கி வைக்கவேண்டு மென்பது அல்ல நமது குறிக்கோள்.

தென்னாட்டு முஸ்லிம்கள் யாவரும் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள்தான் என்பதை சரித்திர ஆராய்ச்சி அறிவுள்ள எவரும் – ஏன் முஸ்லிம்களும் ஒப்புக்கொள்ளத் தயங்கமாட்டார்கள்.

*

இந்நாட்டுக் கிறிஸ்தவர்கள் யாரும் ஜெருஸலத்திலிருந்து வந்து குடியேறியவர்களின் சந்ததியார்களல்ல. நேற்றைய ராமன், கிருஷ்ணன், கருப்பன், சுப்பன், காத்தவராயன் இவர்கள்தான் இன்று தாமஸாகவும் — ஜோசப் ஆகவும் — காதர் சாயபாகவும் காட்சி யளிக்கிறார்களே ஒழிய, அவர்கள் யாரும் இனத்தால் வேறுபட்டவர்களல்லர் என்பதுதான் எனது துணிபு. ஆராய்ச்சியாளர் முடிவும் இதுதான்.

*

தனிப்பட்ட முறையில் எந்த பார்ப்பானிடத்தும் வெறுப்பில்லை. அவர்கள் எங்களை, நம்மைத் தீண்டாதவர்களாக நடத்தி வருதல் கூடாது. இனியும் கூடாதென்பதுதான் எங்கள் கோரிக்கை.

*

நாம் வேண்டுவது அரசியல் ஆதிக்க மல்ல; சமுதாய ஆதிக்கம்தான். சமுதாய ஆதிக்க மென்றால், சமுதாயத்திற்கு எது நன்மையானது என்று நம் பகுத்தறிவு — உலகப் பகுத்தறிவு சொல்லுகிறதோ, அதை மக்களுடைய எதிர்ப்பின்றிச் செய்யக்கூடுமான ஆதிக்கம் என்றுதான் அர்த்தம்.

*

கலப்பு மணம் என்பது இந்திய நாட்டில் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. எல்லா மதங்களாலும் ஒப்புக்

கொள்ளப்பட்டதும் வேதபுராண காரணங்களிலிருந்தும் ஸ்ருதி ஸ்மிருதி ஆகியவைகளால் அனுமதிக்கப்பட்டும் நடந்து வருகின்ற காரியமே ஒழிய, சுயமரியாதைக்காரர்களால் மாத்திரம் நடத்துவதாகச் சொல்ல முடியாது.

*

விதவைத் தன்மையை அனுமதிக்கும் சமூகம் மற்றொரு விதத்தில் விபசாரித்தனத்தைத் தூண்டவும் அனுமதிக்கவும் செய்கின்ற சமூகம் என்றுதான் சொல்ல வேண்டும்.

*

ஏழை மக்களுக்கு உதவி செய்வது என்பது, ஏழைத் தன்மை மனித சமூகத்தில் இல்லாதிருக்கும்படிச் செய்வதே ஒழிய, இங்கொருவனுக்கு அங்கொருவனுங்கு சாப்பாடு போடுவதால் அல்ல.

*

இந்து மக்களின் மதமும் அவர்களது ஜாதிப் பிரிவும் தொழிலாளி — முதலாளித் தன்மையின் தத்துவத்தை நிலை நிறுத்தவே ஏற்படுத்தப் பட்டதாகும்.

*

தண்டவாளப் பெட்டியில் வைத்துப் பூட்டி வைப்பது போல், பெண் ஜாதிகளைப் பூட்டி வைக்கும் சிப்பாய்கள் கூட, மத சம்மந்தமான உற்சவம் பண்டிகை என்றால், தாராளமாய் வெளியில் விட சம்மதிப்பதோடு, கண்ணெதிரிலே நசுக்கப் படுவதையும் கசக்கப்படுவதையும், கண்டு சகித்து எப்படியாகிலும் உற்சவத்தின் பேரால் கவலைப் படுவதில்லை.

*

பார்ப்பனக் கடவுள்களுடைய யோக்யதையை சொல்லப் புறப்பட்டால், கையும் வாயும் காகிதமும்கூட

நாற்ற மெடுத்து விடும். இதை சகித்துக்கொண்டு ஒரு ஜாதி அதுவும் "உயர் ஜாதி" "அதிலும் படித்த ஜாதி" உயிர் வாழ்கிற தென்றால், அந்த நாற்ற மெடுத்த இழி காரியங்களிலேயே உயிர் வாழ்கிற தென்றால் நாட்டில் இவர்கள் தவிர்த்த 100க்கு 90 பேர்களாய் உள்ள மக்கள் கதி என்னவது?

*

விடுதலை பெற்றதாகக் கூறப்படும் இந் நாட்டிலே இன்னும் என் முதல் ஜாதி – கடைஜாதி என்பது சாஸ்திர சட்டபூர்வமாக இருக்கவேண்டும்? மேல் ஜாதி இருந்தால் தான் இன்னின்ன காரியம் முடியும் இல்லா விட்டால் முடியாது என்று கூற முடியுமா? மேல் ஜாதிக்காரன் என்று கூறிக்கொள்ளும் பார்ப்பனர்கள் ஒழுக்கமே உரு வாய் அமைந்துள்ளவர்கள் என்று யாராவது கூற முடியுமா?

*

நமது இழிவுக்குக் கடவுள்தான் காரண மென்றால், அவைகளை உடைத்தெறியுங்கள்; மதமென்றால், அதை ஒழியுங்கள்; மனு தர்மம் — கீதை — புராணம் என்றால் பொசுக்குங்கள்; கோயில் குளம் தேர் திருவிழா வென் றால், புறக்கணியுங்கள்; அரசியல்தான் காரணமென்றால், அறிவுறுத்தத் துணிவு கொள்ளுங்கள்.

*

சூத்திரன் என்கின்ற வார்த்தை இனி சரித்திரத்தில் கூட இருக்க முடியாது. சித்திரத்தில் கூட இருக்க முடியாதே. அகராதியில் கூட இருக்க இடம் அளிக்க மாட்டோம்.

*

கிராம மக்கள் என்று மூடப் பழக்க வழக்கங்களை, அறிவுக்கு ஒத்துவராத கடவுள் தன்மைகளை, ஜாதி – மத –

வெறிகளை ஒழிக்க முற்படுகின்றனரோ அன்றுதான் நம் நாட்டின் உண்மையான விடுதலையை நாம் அடைய முடியும்.

*

தென்னாடானது (திராவிடம்) வடநாட்டிலிருந்து பல விஷயங்களில் மாறுபட்ட நாடாகும். அன்றியும் தென்னாடு வட நாட்டுக்குச் சம்மந்தப்படாத ஒரு தனிப் பிரதேசமாகும்.

*

நமது வாழ்க்கை முறைகளும் — நமது கலாச்சாரங்களும் — பழக்க வழக்கங்களும் வட நாட்டாருடைய பண்புக்கு வேறானவை.

*

மனிதனுக்கு மனிதன் சமம். ஒருவனை ஒருவன் சுரண்டக் கூடாது. ஒருவனுக்கு ஒருவன் உதவி செய்ய வேண்டும். ஒருவனை ஒருவன் வருத்தக்கூடாது. கூடுமானவரை வாழ்க்கையில் ஒருவருக்கொருவர் குறைபாடும் கவலையும் இல்லாமல் தன்னைப்போல் பிறரும் இருப்பார் என்ற நேச உணர்ச்சியுடன் வாழவேண்டும்.

*

திராவிடநாடு அதாவது சென்னை மாகாணம் இந்துஸ்தானத்தின் எந்த மாகாணத்துக்கும் (வடநாட்டைப் போன்ற அரசியலறிவும் — அன்பு நெறியுமற்ற தன்மை ஒன்றைத்தவிர) எந்தத் துறையிலும் பின்வாங்கியதல்ல. இது சரித்திரச் சான்று. அவ்வாறு திறமைமிக்க நாம், கேவலம் கல்வி — கேள்வி – நாகரீகம் – அறிவு – தியாகம் ஆகியவைகளில் மூன்றாந்தர ஆட்களாயிருக்கும் வட நாட்டு வகுப்புவாத வெறியர்களுக்கா அடிமையாயிருப்பது?

இயக்கம்

எங்கு கலகம் நேர்ந்தாலும் பார்ப்பான் ஒருவன்கூட கைக்குச் சிக்கமாட்டான், என்று தெரிந்துதான் பலாத்காரத்தைக் கைவிட்டிருக்கிறோமே ஒழிய, பலாத்காரம் இன்றி வாழ்ந்தால் கடவுள் நமக்கு மோட்ச லோகத்தில் இடம் கொடுப்பார் என்ற ஆசையாலோ, அல்லது கடவுளிடம் சரியான கூலி கிடைக்கும் என்பதாலோ அல்ல.

*

எந்தப் பிரசார இயக்கமும் அன்புவழிச் சென்றுதான் வெற்றிபெற முடியுமே ஒழிய, பலாத்கார வழிச் சென்றால் ஒருபோதும் வெற்றிபெற முடியாது.

*

எழை மக்களுக்குச் சோறில்லை-துணி இல்லை என்பது பற்றிச் சர்க்காருக்குக் கவலை யில்லை என்று கூறினால், உடனே அடக்குமுறை பாணத்தை அவர்மீது எடுத்து வீசினால், அதை எதிர்த்து சமாளிக்க ஒரு இயக்கம் வேண்டாமா? இதைத்தானே நம் இயக்கம் செய்து வருகிறது.

சிறு கூட்டமாயிருந்தாலும் உண்மையும் உழைப்பும் இருந்தால், பெருங்கூட்டத்தையும் செல்வாக்கையும் உடைய அரசியல் கட்சியைவிட அதிகமான நன்மைகளைச் செய்ய முடியும்.

*

விவசாயிகளுக்கும் பொதுஜனங்களுக்கும் இடையில் தரகர் இருக்கக்கூடாது. அதுபோலவே தொழிலாளிகளுக்கும் பொதுஜனங்களுக்கும் இடையில் தரகர் இருக்கக்கூடாது என்பது சுயமரியாதைக்காரர்களின் வியாபார சம்மந்தமான கொள்கை.

*

உலகில் எந்த எந்த ஸ்தாபனங்களால் - எந்த எந்த தன்மைகளால், மனித சமுகத்திற்கு இடைஞ்சல்களும் - சமத்துவத்திற்கும் முற்போக்குக்கும் தடைகளும் - சாந்திக்கும் சமாதானத்திற்கும் முட்டுக்கட்டைகளும் இருக்கின்றனவோ; அவைகளெல்லாம் அழிந்தொழிந்து போகும்படி செய்யவேண்டியதுதான் சுயமரியாதை இயக்கத்தின் முக்கிய இலட்சியம்.

*

ஏழை மக்களுடையவும் - பாமரமக்களுடையவும் - தாழ்த்தப்பட்டுக் கொடுமைப்படுத்தப்பட்ட மக்களுடையவும், நன்மைக்கும் - சமத்துவத்துக்கும் சுயமரியாதை இயக்கம் தோன்றக் காரணம் என்று இருந்தாலும், இப்போது எல்லா மக்களுடைய சாந்திக்கும் - கவலையற்ற தன்மைக்கும் பாடுபட வேண்டுமென்ற லட்சியத்தைக் கொண்டிருக்கிறது.

ஒரு மனிதன் உயிர்வாழ்ந்திருப்பதினால் உயிர் உள்ள வரையில் காரியம் செய்யவேண்டியது கடமை என்பதற்காக ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்பதுதான் சுயமரியாதை இயக்கக்காரர்களின் வாழ்வின் லட்சியம்.

*

காரியம் நல்லதா கெட்டதா என்பதற்கு சுயமரியாதைக்காரர்களின் அளவுகருவி அவர்களது பகுத்தறிவே யல்லாமல்; "ஆண்டவன்" கட்டளையோ, பெரியோர் வாக்கோ, "ரிஷிகள்" — "மகாத்மாக்கள்" எழுதி வைத்த வேதசாஸ்திர புராண நீதிகளோ அல்ல.

*

சுயமரியாதைக் காரனுக்குக் கடமையைத் தவிர, வேரொன்றையும் பற்றிய லட்சியமும் கவலையும் கிடையாது.

*

சங்கராச்சாரி என்பவர் நமது மாநாடுகளுக்குத் தலைமை வகிக்க வந்தாலும், நாம் ஏற்றுக்கொள்ளுவதில் ஆட்சேபனையில்லை. ஏனெனில், கூட்டத்திற்கு வருமுன் நமது கொள்கைகளை - லட்சியங்களை - திட்டங்களை உணர்ந்து கொண்டுதான் வருவார்.

*

சங்கராச்சாரி போன்றவர்களின் உபதேசத்தாலோ, பிரசாரத்தாலோ, நமது இயக்கக் கொள்கைகள் மறைந்து விடும் - மறைக்கப்பட்டு விடும் - மக்கள் மனம் திரும்பி விடுவார்கள் என்று நாம் பயப்படவேண்டியதில்லை.

எவ்வளவு கொடுமையை அனுபவிப்பதாலும், பலாத்காரம் என்றுல் இன்னமும் நமக்குக் கஷ்டமாகத் தானிருக்கிறது. நியாயத்தையும், வாதத்தையும் எடுத்துச் சொல்லி மெய்ப்பித்துப் பார்க்கலாம்; முடியாவிட்டால் இன்னமும் பொறுக்கலாம் என்கின்ற எண்ணமே தோன்றுகிறது.

*

மக்களின் சுதந்திரத்திற்கும் அறிவுக்கும் சுய மரியாதைக்கும் உலகம் போகின்ற போக்கில் நாம் இருக்கும் நிலை எவ்வளவு பிற்பட்டது என்பதையும், நமது போக்கு எவ்வளவு அசைவற்றதும் நிதானமுமானது என்பதையும் யாராவது கவலையுடன் சிந்தித்துப் பார்த்தால், கடுகளவு கவலையிருந்தாலும் மதமும் சாமியும் மதாச்சாரிகளும் அவர்கள் கதைகளும் நம்மை ஒரு சிறிதும் தடைபடுத்தவேமாட்டா!

*

தேசமோ மக்களோ முன்னேற வேண்டுமானால், அறிவும் விஞ்ஞான தத்துவமும் ஒழுக்கமும் முன்னேற்ற மடைந்தாக வேண்டும்.

*

அறிவைப் பிரதானமாக வைத்துப் பணியாற்ற வேண்டு மென்பதே எனது 30 ஆண்டு பணியின் கருத்தாகும்.

*

பெரியார் சொன்னது - கடவுள் கூறியது - பிர்மா சொன்னது - எனவே - நானும் சொல்கிறேன்; நீங்களும் நம்ப வேண்டும் என்பதாக இக்காலத்திலும் எவனுவது கூறுவானேயானால், அவனைவிட பொது நல விரோதி எவனுமிருக்க முடியாது.

நமது முற்போக்கு சக்தி மக்களிடையே வேறூன்றி விட்டது. நமக்குள்ளே யிருக்கும் அற்ப அரசியல் வித்யாசங்களை மறந்து, சமுதாயத் துறையிலே ஒன்று பட்டு, குறைந்தது 5 ஆண்டுகள் பணியாற்றுவோமானால் பார்ப்பனீயம் பறந்து ஓடும்-அந்நிய ஆதிக்கங்கள் அறவே அகன்றுவிடும் என்று உறுதி கூறுகிறேன்.

*

கல்லைக் கடவுளென்று கருதித் தூர்ப்பிரசாரம் செய்யும் கபோதிகளை கடுகளவும் நம்பக்கூடாது. அவர்களிடம் பக்தியும் ஒழுக்கமும் இருக்க முடியாது. பித்தலாட்ட மத சம்மந்தமான மூடநம்பிக்கைகள் யாவற்றையும் ஒழிக்க இளைஞர்கள் முற்படவேண்டும்.

*

நான் கூறிவந்த கொள்கைகள் இனி ஒவ்வொன்றுக நடைபெற்றுக வேண்டிய கால நிலையை நாடும் மக்களும் அடைந்துவிட்டனர். காலமாறுதல், மனப்புரட்சி என்னும் வேகத்திலே பழமையெனும் பித்தலாட்டங்கள் இனி எதிர்த்து நிற்க முடியாது.

*

பார்ப்பனீயத்தின் கடைசி மூச்சு ஒழியும்வரை திராவிடர் இயக்கம் மட்டும் இருந்தே தீரும். அதுவரை எப்பேர்ப்பட்ட கொடுமை—அடக்கமுறை—சூழ்ச்சி—வஞ்சகம் ஆகியவைகளை அதன் எதிரிகளோ அரசியலாரோ கையாண்டாலும் சரி, இறுதியில் இயக்கக் கொள்கை வெற்றி யுற்றே தீரும்.

*

நாங்கள் ரகஸ்யத்தில் சதி செய்பவர்களல்லவே. எங்கள் கழகம் சட்ட விரோதமான கழகமும் அல்லவே. பலாத்காரத்தில் நம்பிக்கை உடையவர்களும் அல்லவே

நாங்கள். இருந்தும் ஏன் எங்கள் கூட்டங்களுக்குத் தடை விதிக்கிறீர்கள். எங்கள் இழிவுபோக மனிதர்களாக வாழ நாங்கள் செய்துவரும் சிறு முயற்சிக்குக் கூட தடை விதிக்கப்படுகிற தென்றால், எப்படி சகித்துக் கொண்டு வாளா விருக்கமுடியும்?

*

நாட்டில் அமைதி நிலவ வேண்டுமென்பதில் சர்க்காருக்குள்ள கவலையை விட எங்கள் கவலை அதிகம்.

*

நம் இரத்தம் சிந்தச் சிந்தத்தான் இந்த ஆட்சியாளர் இரத்தத்திலும் சற்று இன உணர்ச்சி—மான உணர்ச்சி ஏற்படும்.

*

என்னை ஒரு பார்ப்பனத் துவேஷி என்று பார்ப்பனப் பத்திரிகைகள் பிரசாரம் செய்து வருகின்றன. நான் எந்தப் பார்ப்பானுக்கும் விரோதியல்ல; பார்ப்பனீயத்துக்குத்தான் விரோதி. பார்ப்பான் ஒழியவேண்டும் என்று கூறுபவனல்ல; பார்ப்பனீயம் ஒழியவேண்டும் என்று தான் கூறி வருபவன். ஒரு பார்ப்பனனும் இந்த உண்மையை உணர்ந்துகொள்ள முயற்சிப்பதில்லை.

*

பார்ப்பனர்கள் எங்களை இழிவு படுத்தக் கூடாது; எங்களின் உழைப்பை உறிஞ்சி வாழக்கூடாது; எங்களை விட மேலானவர்கள் சகல போக போக்கியங்களுக்கும் உரியவர்கள் என்று நினைத்துக் கொள்ளக்கூடாது என்று தான் நாங்கள் கூறுகிறோம். பிறவியினால் உயர்வு தாழ்வு கற்பிக்கக்கூடாது—சாதி பேதம் கூடாது என்று தான் நாங்கள் கூறுகிறோம். இது எப்படிக் குற்றமாகும்?

எதிர்கால நல்ல ஆட்சியை நிறுவ வேண்டுமென்ற கொள்கைக்கு உழைத்துவரும் பொறுப்புள்ள நாம், சட்டங்களை மீறுவதென்றால் சற்று நிதானமாக யோசித்துச் செய்யவேண்டியதாக யிருக்கிறது. நம்மாலும் தவிர்க்க முடியாத நிலைக்கு சர்க்காரின் தடையுத்தரவு அமுல் நம்மை வம்புக் கிழுக்குமானால், அவ்வித சமயங்களில் மட்டுமே அவர்களுக்கு அறிவு புகட்ட வேண்டியது நம்முடைய கடமையாகக் கொண்டுள்ளோம்.

*

பார்ப்பானுக்கும் — பனியாவுக்கும் தனிப்பட்ட விரோதத்திற்காக நமது இயக்கம் நடத்தப்படுகிறதென்று எண்ணிக்கொண்டிருப்பவர்களை பைத்தியக்காரர்கள் என்றே கூறுவேன். ஆனால், பார்ப்பனீயமும்—பனியா யிஸமும் திராவிடத்தை எவ்விதத்திலும் தாழ்த்துவதை வீழ்த்துவதை இனி அனுமதிக்க முடியாது. இவ்விரண்டு பிற்போக்கு சக்திகளுக்கும் அரசியலாரின் பாதுகாப்பு எண்ணதான் இருந்தாலும், அதற்கு நாளை—நமது இயக்கமோ அஞ்சப்போவதில்லை.

*

கோவில் நுழைவு முதல் பொதுக் கிணறுகளில் தண்ணீர் எடுக்கும் வரை, ரயில்வே சிற்றுண்டி முதல் சாதாரண ஓட்டல்களிலும் ஜாதி வித்யாசம்—உயர்வு கூடாதென்பதிலும் தாய்மார்களை ஆண்டவன் பேரால் பொட்டுக் கட்டும் அநாகரீகம் ஒழியவேண்டும் என்பது வரை நாங்கள் கிளர்ச்சி செய்து, சிறைசென்று, பல தொல்லைகளுக்கு உட்பட்டு, அது நடைமுறையிலும் இன்று இருந்து வருகிறதே யல்லாது, ஒன்றிலும் நாம் தோல்வியடையவில்லை.

"பறையன் சக்கிலியன் என்பவனை அனுமதிக்காத கோவிலை 'டைனமெட்'டை வைத்து உடை, வெடி குண்டு போட்டு அழி" என்று நாங்கள் சொன்ன பிறகு தானே கோவில்கள் திறந்துவிடப்பட்டன! "ரயில்வண்டி நிலையங்களில் ஜாதி பெயர் போட்டிருப்பதை தார் பூசி அழி" என்ற பிறகுதானே, ரயிலில் உணவு இட பேதம் ஒழிந்தது!

*

எங்கள் இயக்கம் ஓர் அற்புத இயக்கம். அதாவது பதவியல்லாமல் பண்புகளைச் செய்வது. அதிகாரம் இல்லாமல் ஆகவேண்டியதை ஆக்கிக்கொள்வது.

*

எங்களது நோக்கம் பதவிக்கோ—பெருமைக்கோ—ஆட்சி பீடத்தில் அமரவோ அல்ல. காங்கிரஸாரே ஆளட்டும்; அவர்களே சட்டசபைக்குப் போகட்டும். ஆனால், வடநாட்டானுக்கு அடிமைப்பட்டிருந்தால், நாங்கள் அவ்வாட்சியை எதிர்த்தே தீருவோம்.

*

இதுவரை எந்தப் போராட்டத்திலும் நாங்கள், தோல்வியடையவில்லை. 1922 ஜனவரி 19 'ஹிந்து' வைப் பாருங்கள்:— பண்டிட் மாளவ்யா போன்ற பிரமுகர்கள், நான் காங்கிரஸிலிருந்தபோது, கள்ளுக்கடை மறியலை நிறுத்துமாறு காந்தியாரிடம் சமரசத்திற்கு முனைந்து நின்றனர். எனினும், காந்தியார் என்னைக் கேட்காமல் விட்டுக் கொடுக்க முடியாதென்றார். காரணம் ஈரோட்டில் தான் தடை உத்தரவை சர்க்கார் வாபஸ் வாங்கினர்.

அதனாலேயே, காந்தியார், "ராமசாமி நாயக்கர் அவர்கள் மனுவியார் இஷ்டத்தின்மீது வாபஸ் வாங்குவேன்" என்றார். இந்தச் செய்தி "ஹிந்து"வில் இருக்கிறது. வைக்கத்தை எடுத்துக்கொள்ளுங்கள். தெரு உரிமைக்குப் போராடியவன், கோவில் பிரவேச உரிமை பெற்று திரும்பினேன். இதை மமதையால்—பெருமையால் கூறவில்லை. மக்கள் பேராதரவு—கொள்கை உண்மை—போராட்ட அனுபவம் இதனால், இறுதி வெற்றி எங்களது என்று உறுதி கூறுகிறேன்.

காங்கிரஸ்

எனக்கு விவரம்தெரிய ஆரம்பித்த காலம் முதற் கொண்டே நான், அதாவது 1910-லிருந்தே காங்கிரஸ் ஸ்தாபனத்தின் போக்கைக் கவனித்து வந்திருக்கிறேன். அது அரசியலைக் கைப்பற்றுவதிலேயேதான் நாட்டம் காட்டி வந்திருக்கிறது.

*

காந்தியார் மிகப் பெரியவர். உலகம் அறிந்த பிரபலஸ்தர், அரசியலில் மகா அற்புத புரட்சிகளை உண்டாக்கியவர். சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், காந்தியாருக்குப் பதிலாக அந்த இடத்தில் மற்றொருவரை வைக்க முடியாமலும்; அவருக்கு 1000-அடி தூரத்திலாவது நிற்கத் தகுந்தவர் இன்னார் என்று நினைப்பதற்குக்கூட ஒரு ஆள் கிடைப்பதற்கு இல்லாமலும் இருக்கும்படி, அவருக்கு அவரே சமம், மற்றொருவர் நினைக்கவும் கிடைத்திலர் என்றபடி ஒப்பற்ற பெரியாராய் இருந்துவந்தார். அப்படிப்பட்ட பெரியார் இந்த நாட்டில் சுட்டுக் கொல்லப் பட்டவரானார்.

சுயராஜ்யத்தின் பேரால் எல்லாத் துறைகளிலும் எவ்வளவு கொள்ளை? இதை எதிர்த்துக் கேட்கிறவர்கள் என்னைத்தவிர வேறு யார்? இவ்வளவு தொல்லைகளையும் சகித்திருக்கும் பகுத்தறிவற்ற மக்கள் வேறெந்த நாட்டிலாவது இருக்கமுடியுமா?

*

காங்கிரசினால் பார்ப்பனர்களுக்கும் பணக்காரர்களுக்குமட்டுமே நன்மை பயக்குமேயன்றி, பாமரமக்கள் உழைப்பாளிகள் ஏழைமக்கள் ஆகியோருக்கு நல்வாழ்வு ஏற்படாது என்று அந்நாளிலிருந்தே நான் கூறிவந்தேன். எங்கள் பேச்சை நீங்கள் நம்பவில்லை. ஆனால், இன்றைய காங்கிரஸ் ஆட்சியில் நாங்கள் கூறியதை நீங்கள் நடைமுறையில் கண்டபின்னர்தான் ஓரளவு உங்களுக்கும் உணர்வு ஏற்பட்டிருக்கிறது.

*

காங்கிரசிலே அர்த்தமில்லாத வீரர்களுக்கெல்லாம் இடம் கொடுத்ததால்தானே, இன்று அவர்களே அகப்பட்டுக்கொண்டு விழிக்கிறார்கள்.

*

ஷெடியூல் வகுப்பினரது படிப்பு—உத்யோகம்—கிணறு—குளம்—காப்பிக்கடை—கோவில் பிரவேசம் ஆகியவைகளுக்கு பாடுபட்டது யார்? இவைகளுக்கு காங்கிரஸ் எப்போதாவது உண்மையாக உழைத்ததாகக் கூறமுடியுமா? ஒருவர் கட்டிய வீட்டில் மற்றவர் வந்து குடியேறியதுபோல; ஜஸ்டிஸ்–சுயமரியாதைக் கட்சிகள் செய்த நலன்களை, இன்று காங்கிரஸ் ஆதிக்கத்திலிருப்பதால், தாங்கள் செய்ததாக ஜம்பம் அடித்துக் கொள்கிறார்கள்.

நான் 1924-ல் தமிழ்நாடு காங்கிரசுக்கு தலைவனாயிருந்த காலத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் கொண்டு வந்த தீர்மானங்களில் ஒன்று:—தேசியத் துறையில் மேல் நாடு—கீழ்நாடு என்ற பாகு பாடின்றி, ஒரே சமுதாயம்—அதாவது ஒன்றுபட்ட ஜாதிமுறையாக இருக்கவேண்டும்; காங்கிரஸ் கொள்கைகளில் ஜாதிப்பிரிவு ஒழிக்கப்பட வேண்டும் என்பதாகும். இதை என் நண்பர் ராஜகோபாலாச்சாரியாரே எதிர்த்து தள்ளச் செய்துவிட்டார். காங்கிரஸ் பிரதிநிதித்துவம் உத்தியோகங்களில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமாக இருக்க வேண்டுமென்ற தீர்மானத்தை திரு. வி. க. அவர்கள் விஷயாலோசனைக் கமிட்டியில் தள்ளிவிட்டார். பின், காங்கிரஸ் பிரதிநிதித்துவத்திலாவது வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வேண்டுமென்று விஷயாலோசனை கமிட்டியில் கூறினேன். இதுவும் நிறைவேறவில்லை. குறைந்தது 30 – பேர்களாவது ஆதரிப்பதாக கையெழுத்திட்டால், மாநாட்டில் எடுத்துக் கொள்ளப்படும் என்றார்கள். தோழர் எஸ். ராமனுதன் 30-கையெழுதுக்குப் பதிலாக 50-க்கு மேல் வாங்கினார். இத்தீர்மானம் நிறைவேறினால், காங்கிரசே அழிந்துவிடும் என்று தோழர்கள் ராஜகோபாலாச்சாரி, சீனிவாசய்யங்கார், சத்யமூர்த்தி போன்றவர்கள் கூப்பாடுபோட்டனர். தலைவர் திரு. வி. க. வும். வரதராஜுலு நாயுடுவும் அவர்களை மீற முடியாதவர்களாய் தள்ளிவிட்டனர். எனவே, பார்ப்பனர்கள் தங்கள் வயிறு குளிர்ந்ததாய் எண்ணியதோடு; என்னை மாநாட்டில் பேசவொட்டாமலும் தடுத்து விட்டனர். அன்றுதான் ஜாதி ஆணவத்தையும்—ஆதிக்கத்தையும் ஒழித்து, வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்தியே தீருவேன் என்று சபதம் செய்து, அங்கேயே கூறிவிட்டு, காங்கிரஸை விட்டு வெளியேறினேன். அன்றுமுதல் இன்றுவரை அதிலுள்ள புரட்டு—தந்திரம்—சூழ்ச்சி இவைகளை இந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக எடுத்துக் கூறிவந்திருக்கிறேன்.

ஆட்சி

வெள்ளையன் காலத்திலாவது நம் வீட்டில் திருட்டுப் போகும். இப்போதைய சுயராஜ்ய காலத்தில் போலீஸ் காரன் வீட்டிலேயே திருட்டுப் போகிறது. மந்திரி வீட்டில் திருட்டுப்போகிறதே.

*

ஜனநாயகத்திற்கு எவ்விதத்திலும் சம்மந்தமில்லாத முறையில் தேர்ந்தெடுத்தனுப்பப்பட்டுள்ள அடிமை வீரர்கள்தான் நமது விதியை நிர்ணயிக்கும் வேலையில் டில்லியில் ஈடுபட்டுள்ளார்கள்.

*

இம் மாகாணத்து மக்களால் வெறுத்து ஒதுக்கப்பட்ட ஒருவருக்கு சுயராஜ்யம் வந்ததும் கவர்னர் ஜெனரல் வேலை கொடுக்கப்பட்டது என்றால், இம் மாகாண மக்களின் ஜனநாயக உணர்ச்சிக்குச் சாவுமணி அடிக்கும் வேலைதானே இது.

*

பேச்சுரிமை எழுத்துரிமை என்று கூறியது எல்லாம் இன்று எங்கேயோ மறைந்துவிட்டனவே. சர்க்காரின்

குற்றம் குறைகளை எடுத்துக்கூறி வருபவர்கள் ஒன்று ஜெயிலில் அடைக்கப்படுகிறார்கள். அல்லது சுயராஜ்ய விரோதிகள் என்று தூற்றப்படுகிறார்கள்.

*

நம் நாட்டில் அளவுக்கு மீறிய செல்வச்செருக்கர்களையும், கல்நெஞ்சங்கொண்ட கனத்த முதலாளிமார்களையும், ஒரு பக்கத்தில் வெகு பந்தோபஸ்தாக வைத்து; மற்றொரு பக்கத்தில் வேலையில்லாத் திண்டாட்டக்காரனையும், பிச்சைக்காரனையும் வைத்துக்கொண்டிருக்கிறோம்.

*

நமக்கு வேண்டிய சுய ஆட்சி ஜாதிக்கொடுமைகளையும் ஜாதிப் பிரிவுகளையும் ஜாதிச் சலுகைகளையும் ஒழிக்கத்தக்கதாய் இருக்கவேண்டுமே ஒழிய, வேறல்ல.

*

ஒரு பெருங்கூட்ட மக்கள் சமூக வாழ்வில் தீண்டப்படாதவர்களாகவும், மற்றொரு கூட்டம் சூத்திரர்கள்–அடிமைகள்–தாசிமக்கள் என்ற பெயரிலும் இருந்துவருகின்றார்கள் என்றால், இது மாறுவதற்கு அருகதையில்லாத சுயராஜ்யம் யாருக்கு வேண்டும்?

*

பலாத்காரத்தில் நம்பிக்கையுள்ள சர்க்கார் ஆகஸ்ட் தினத்திலேயே சுதந்திரத்தைப் பெற்றுவிட்டதாக பறைசாற்றி, அதற்காக பரிசுகளும் வழங்கிவரும் சர்க்கார்; பலாத்காரத்தை தயை–தாட்சண்யம் இன்றி பிரயோகஞ் செய்வார்கள்.

*

அடிமைகளை நம்பி ஆதிக்கம் கொள்ளுவது முட்டாள் தனம்.

அடக்குமுறைத் தாண்டவம் நடைபெற்று வருமானால் அப்புறம் நாட்டின் நிலை என்னவது? சிறிய காரியங்களுக்கே பரிகாரத்திற்கு வகையில்லையானால்— அடக்குமுறையின் பயன் என்ன வாகும் என்று சிந்திக்காமல் எதிரிகளே விரட்டிவிடலாம் என்று ஆட்சியாளர் முயற்சிசெய்து வருவார்களானால்—இதையும் பத்திரிகைகள் பார்த்துக்கொண்டு வருமானால், அப்புறம் யாருக்கேனும் நாட்டில் பாதுகாப்பு இருக்க முடியுமா?

*

நகரசபை விஷயங்களில் அதாவது குறிப்பாகத் தேர்தலில் கட்சிப்பிரதி கட்சிகள் போால் உருப்பினர்களைத் தேர்ந்தெடுப்ப தென்பது அறவே ஒழிக்கப்பட வேண்டும். தனிப்பட்ட நபரின் தனிப்பட்ட யோக்யதை— நாணயம்— அவரிடம் மக்களுக்கிருக்கும் உண்மையான செல்வாக்கு— நம்பிக்கை ஆகியவைகளை முன்வைத்தே தேர்தல் நடைபெறவேண்டும். சட்டத்தை உண்டாக்குவதோ, மாற்றுவதோ நகரசபைகளின் வேலையல்ல; சட்டத்தின்மூலம் வகுக்கப்பட்ட சில காரியங்களை நடைமுறையில் ஒழுங்காக நடத்தும் இயந்திரம் போன்றது நகராட்சி மன்றங்கள். இவ்வித ஸ்தாபனங்களில் என் வீணை அரசியல் வாதங்களையும், கட்சிப் பிரதி கட்சிகளையும் புகுத்தி இதன் பெருமையைக் கெடுக்க வேண்டும்?

*

நகரசபைகளில் கட்சி வித்தியாசங்கள் என்று தலைதூக்க ஆரம்பித்துவிட்டதோ, அன்றிருந்தே அதன் பெருமை அடிபோடு போய்விட்டதென்பது மட்டுமல்லாமல், மக்களுக்கும் அதனால் பெரிதும் பாதக மேற்பட்டு விட்டது.

ஸ்தல ஸ்தாபன சுயாட்சி என்பது இன்று நம் நாட்டில் நடைபெறுவது உண்மையானால், மக்களுக்கு வரியே இருக்கக்கூடாது. நகரசபைகளின்மூலம் எல்லா முக்கிய வியாபாரம் – சினிமா – ஓட்டல் முதலானவைகளை ஏற்று நடத்தினால், தனிப்பட்ட ஒரு சில முதலாளிகளுக்கு வரும் லட்சக்கணக்கான கோடிக்கணக்கான கொள்ளை லாபம் நகரசபைகளுக்கு வருமல்லவா? அப்படி வரும் வருவாயைக்கொண்டு, மக்களிடம் வரி வசூலிக்காமலேயே அவர்களுக்கு வசதி செய்துகொடுக்க முடியும் என்பதே எனது உறுதியான எண்ணமாகும்.

*

இதுவரை சம்பாதித்த பொருள்களை– லாபங்களை வேண்டுமானால் நாம் கேட்கவேண்டாம். ஆனால், இன்று நாடுள்ள நிலைமையில் மேலும் மேலும் தனிப்பட்ட நபர்கள் பொருள் குவிப்பதற்கு என் இடமிருக்கவேண்டுமென்று கேட்கிறேன்.

*

பிரிட்டிஷார் ஆட்சிக்குமுன் வடநாடு– தென்னாடு பிரிந்திருந்தது. தங்களாதிக்கத்தில் வைத்திருக்கும் அவசியத்திற்கு ஒன்றாக இணைத்தார்கள். அவர்கள் ஆட்சி போய்விட்டதால், முன் எப்படியிருந்ததோ அப்படியே பிரிந்திருக்கவேண்டுமென்று விரும்புகிறோம்.

*

தென்னாடு பிரிந்தால், தன் பாதுகாப்புக்கு, தக்க ஏற்பாடு செய்து கொள்ளும். வடநாட்டுடன்கூட நேச ஒப்பந்தம் செய்து கொண்டு, அந்நிய எதிர்ப்பைச் சமாளிக்கும். போதாதென்றால், வேறு நாடுகளுடன் நேச ஒப்பந்தம் செய்து கொண்டு தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும். இன்று உலகிலுள்ள தனித்தனி நாடுகளின்

பாதுகாப்புக் கொள்கையாக பெரிதும் இப்படித்தான் இருந்து வருகிறது.

*

மக்களுக்கு மானமும் அறிவும் ஏற்படும்படி செய்ய வேண்டும். அவர்களை மூட நம்பிக்கைகளிலிருந்து விலக்கவேண்டும். இதுதான் நல்ல ஆட்சிக்கு வழி, தானாக ஏற்படச் செய்யும் விதம்.

*

சுதந்திரம் கிடைத்த 6 மாதத்திற்குள்ளாகவா காந்தியார் கொலை செய்யப்படுவது? அடுத்த 6 மாதத்திலா இந்த அநீதி? வேறு நாட்டில் இப்படி நடந்திருந்தால், அவ்விஷயங்கள் இப்படி நாதியற்ற தன்மையில் இருக்குமா?

*

இன்றைய ஆட்சி வெள்ளையருக்கும் காங்கிரசாருக்கும் ஏற்பட்ட ஒரு ஒப்பந்த ஆட்சிதானே தவிர, இந்திய மக்களுக்கு ஏற்பட்ட சுதந்திர ஆட்சியல்ல. இதன் பயனுய் இந்த நாட்டிலுள்ள காங்கிரஸல்லாத மக்களுக்கு நன்மையில்லை—பிரதிநிதித்துவம் இல்லை—வர்ணஸ்ரம தர்மக் கொடுமை ஒழிவதில்லை.

*

ஆரியர்கள், தீபாவளியை திராவிடர்கள் கொண்டாடும்படிச் செய்வதுபோல்; ராமன் — கிருஷ்ணன் பிறந்த நாளையும்—சமணர்களைக் கழுவேற்றிய நாளையும் கொண்டாடும்படிச் செய்வதுபோல்; ஆகஸ்ட் 15-ந் தேதியை, வடநாட்டாட்சி திராவிடர்களைக் கொண்டாடச் செய்கிறது என்பதைத்தவிர, வேறொன்றும் இதற்குச் சமமாகச் சொல்ல எனக்குத் தோன்றவில்லை.

*

சர் பட்டமும், மற்றும் பல எழுத்துக்களும், மகாராஜா பட்டமும் உள்ள ஒரு செல்வவான் – ஏழை மக்களைக்

கண்ணில் கண்டிராதவர் — மக்கள் வாழ்வை அறிந்திராதவர்—தனிக்காட்டில் வாழ்ந்த மிருகேந்திரன் போன்று இன்பலீலைக் கோலாகலங்களுடன் எதேச்சையாய் வாழ்ந்த "நரேந்திர"ரையா சென்னை மக்களுக்கு கவர்னராக, ஏழை மக்கள்—பொது மக்கள் அரசாங்கம் நியமிப்பது?

*

அடிமைபா யிருந்து, அரைவயிற்றுக் கஞ்சிக் கலைந்து ஆண்டாண்டாய் உழைத்து இழிஜாதியாயிருந்து மறுஜென்மத்தில் பலன்பெறலா மென்ற பித்தலாட்ட சுயநல சூழ்ச்சி உபதேசத்தை மறந்து; சாவதற்குள் இழிவைப் போக்க ஆவன செய்தால்தான் மனிதனுய் வாழலாம்.

*

அறிவு வளர்ச்சியும் முற்போக்கு முயற்சியின் பலனும் கூடாது என்று சொல்ல, இந்த இருபதாம் நூற்றாண்டில் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில்கூட ஒரு மனிதனைப் பார்க்க முடியாது.

*

ஒருவன் எப்படிப்பட்ட மனிதனாலும் மனிதத் தன்மைக்கு மேற்பட்டவன் என்று கருதினாலும், அவனது அபிப்பிராயங்கள் எப்படிப்பட்ட மனிதனாலும் பரிசோதிக்கப்படவும், தர்க்கிக்கப்படவும் தக்கது என்பது எனது அபிப்பிராயம்.

*

எந்த மனிதனுக்கும் அவனது அபிப்பிராயம் என்னும் போர்வால் எதையும் சொல்ல உரிமையுண்டு. அதைத் தடுப்பது யோக்கிய மற்ற காரியம்.

மொழி

நமது மொழிப் போராட்டம் நமது நாட்டை—நம்மை, அதாவது தமிழராக — தமிழ்மொழி பேசுபவராக ஒன்று பட்டு வாழ்ந்த கன்னடியர்-தெலுங்கர்—மலையாளத் தோழர் களையும் விழிப்புறச் செய்து மீண்டும் நாம் ஒன்று சேர்ந்து, வடநாட்டான் ஆதிக்கத்தை அறவே ஒழித்து தனி சுதந்திர குடியாட்சியாக மாறும் வரை நீடித்து நடந்தே தீரும்.

*

ஆந்திரர் – கன்னடியர் – மலையாளிகள் மொழியில் வடசொல்லை நீக்கிப் பார்த்தால், எல்லாம் தமிழேயாகும், பார்ப்பனன் பேசும் தமிழைவிட, ஆந்திரர் மலையாளிகள் பேசும் மொழி எவ்வளவோ மேல். சரித்திரப்படி அந்நாடு களும் தமிழ் நாடே.

*

"இந்தி வாழ்க" என்று எந்த திராவிடராவது கூறுவாராஞல் — மனதில் எண்ணுவார்களே யானல். அவர்களை இழிமக்கள் என்று கருதி விட்டு விடுங்கள், என்றைக்காவது ஒரு நாள் அடிமைப் புத்தியை விட்டு, திருந்தியே தீருவார்கள்.

வடநாட்டான் ஒழிந்தால், பார்ப்பனர் அடங்கி விடுவார்கள். பின் ஜாதி முதலியவற்றை அவர்களே மூட்டை கட்டி விடுவார்கள். இன்றுள்ள முக்ய வேலை இந்தியை ஒழிப்பதே யாகும். ஏனெனில், இந்தியைப் புகுத்துவது வடநாட்டு ஆதிக்க வளப்பத்துக்கே யாகும்.

*

இந்தி ஒழிய வேண்டும்; இல்லை யென்றால் என்னையும் அண்ணாத்துரையையும் எங்களைப் பின்பற்றும் முக்கிய தோழர்களையும் அடியோடு ஒழித்து விட வேண்டும்; இன்றேல், இந்த மந்திரிகள் ஆட்சி ஒழிய வேண்டும், இவைகளில் எதாவது ஒன்று நடைபெற்றால் தான், மந்திரிகள் கூறுவது போன்று, நமது போராட்டம் "புஸ்" என்று போகும். இல்லாத வரை ஆண்டு ஒன்றோ ஒன்பதோ எத்தனையோ ஆனாலும், நமது போராட்டம் நீடிக்கும்; வெற்றி பெற்றே தீரும்.

*

வித்தில்லாமல் எப்படி சில தாவர வர்க்கங்கள் உற்பத்தியாகின்றனவோ, அதுபோல ஆண் பெண் சேர்க்கை யில்லாமல், பல ஜீவ வர்க்கங்களும் உற்பத்தியாகின்றன.

*

மனித ஜீவன், ஜீவப் பிராணிகளில் தனிப்பட்டது — மேலானது. அதற்கு மாத்திரம் சில தத்துவங்கள் உண்டு.

*

பல்வேறு மதங்களில் மனித வாழ்க்கைத் தத்துவத்தில், எதாவது ஒன்றுக்கொன்று பிரமாத மாறுதல் உண்டா என்று பார்த்தால் ஒன்றுமே காண முடியாது.

பகுத்தறிவு ஆதாரமும் — விஞ்ஞான ஆதாரமும் — பிரத்தியட்ச அனுபவ ஆதாரமும் இல்லாத எவ்வித எதிர்ப்புகளிலும் தடைகளிலும் பெரும்பாலும், சூழ்ச்சிகளும் புரட்டுகளும் சுய நலங்களும் பித்தலாட்டங்களும் தான் மலிந்திருக்கும்.

*

தொழிலாளி உழைத்துத் தந்த பொருளை எப்படி பத்திரப் படுத்துவது — அதிகமான சுக போகங்களை எப்படி அனுபவிப்பது — நாமே உலகில் பெரிய சீமானுக எப்படி ஆவது — செத்த பிறகு நமது பெருமை புகழ் செல்வம் இவை நமது பிள்ளை பேரன்களுக்கு எப்படி நிலைத்திருக்கச் செய்வது போன்ற பெருங்கவலைகள் தான் தொழிலாளி அல்லாத மனிதர்களின் மனத்தை சதா அரிப்பது.

*

தொழிலாளிக்கு இரண்டணாவிற்கு நான்கணா கூலி உயர்த்தித் தந்தால், செய்யப்படும் சாமானின் விலையை அதிகப்படுத்தி, தொழிலாளிகளே அதிக விலை கொடுத்து வாங்க வைத்து விடுவார்களாதலால்; வலது கையில் கூலி அதிகம் கொடுத்து, இடது கையில் அதைத் தட்டிப் பிடுங்குபவர்கள் முதலாளிகள்.

*

தொழிலாளர் பிரச்னை என்பது உலக மக்கள் சமூகத்தின் பிரச்னையே.

*

உலகமானது தொழிலாளர்களாலேயே நிர்மாணிக்கப்பட்டு நடைபெற்று வருவதா யிருந்தும், உலக வாழ்க்கையில் சகல விதமான தொல்லைகளுக்கும் — துன்பங்களுக்கும் — கவலைகளுக்கும் ஆளாகிறவர்கள் தொழிலாளர்கள் தான்.

தொழிலாளர்களின் கஷ்டமும் கவலையும் துன்பமும் தொலைய வேண்டுமானால், முதலாளித்தன்மை என்பது இல்லாமல் போக வேண்டும்.

*

எந்தக் காரணத்தை முன்னிட்டும் பாடுபடும் மக்கள் நிலை தாழ்ந்திருக்கவும், பாடுபடாத மக்கள் நிலை உயர்ந்திருக்கவும் கூடாது என்பது தான் தொழிலாளர் கிளர்ச்சியின் முக்கிய தத்துவம்.

*

நம் நாட்டில் ஒரு சங்கம் ஏற்பட்டால், அதில் தங்களுக்கு எவ்வளவு லாபமிருக்கும்; தங்கள் பெருமைக்கும் வாழ்வுக்கும் எவ்வளவு பயன்படும் என்றுதான் அதில் சம்மந்தம் வைக்கிறார்களே தவிர, உலக நன்மைக்கு — ஜன சமூக மேம்பாட்டிற்கு என்ற கவலையையே அறவே விட்டு விடுகிறார்கள்.

*

நம் நாட்டில் புதிதாக ஒருவரைச் சந்தித்தால் அவர் உத்யோகத்தைப் பற்றித்தான் முதலில் விசாரித்து அதற்குத் தக்க மதிப்புக் கொடுப்போம்; ரஷ்யாவில் ஒருவரைக் கண்டதும் 'சமுதாய சேவை என்ன செய்திருக்கிறீர்?' என்று தான் பிரதானமாய்க் கேட்பார்கள்.

திருக்குறள்

திருவள்ளுவர் குறளை மக்கள் மெச்சுகிறார்களே ஒழிய, காரியத்தில் அதை மலந் துடைக்கும் துண்டுக்காகிதமாகக் கருதி அதற்கு நேர் விரோதமாக நீதியைப் போற்றுகிறார்கள்.

*

வள்ளுவர் அவரது 1300 குறளிலும் கடவுளைப்பற்றி ஒரு வார்த்தைகூட சொல்லவில்லை, கடவுளுக்காகச் சொல்லப்பட்டு வந்த சில உயர் குணங்களை—தன்மைகளை உதாரணத்திற்காக எடுத்தாண்டிருக்கிறார் என்று சொல்லலாம். அதுவும் உருவத்தையோ நடத்தையையோ கையாண்டார் என்று சொல்லமுடியாது. அப்படிப்பட்ட குறள் பாமர மக்களுக்கு வழி காட்டவும் நல்வழியில் நடக்கத் தூண்டவும் போதாது என்று சொல்ல முடியுமா?

*

குறளைப் பொறுத்தவரை என்னுடைய கருத்து, ஆரியக்கலை – பண்பு – ஒழுக்கம் – நெறி யாவும் பெரிதும், தமிழர்களுடைய கலை – பண்பு – நெறி – ஒழுக்கங்களுக்கு

தலை கீழ் மாறுபட்ட தென்பதைக் காட்டவே சிறப்பாக குறள் உண்டாக்கப்பட்டது என்பதாகும்.

*

என்ன மதத்தினர் என்று கேட்டால், "வள்ளுவர் மதம்" என்று கூறுங்கள், உங்கள் நெறி என்ன வென்றால், "குறள் நெறி" என்று சொல்லுங்கள்; அப்படியாயின் எந்த பிற்போக்கு வாதியும், எப்படிப்பட்ட சூழ்ச்சிக் காரனும் முன் நிற்கமாட்டான். காரணம்: குறளை மறுக்க முடியாது.

*

ஜாதி–மதம்–கடவுள் ஆகியவற்றைக் கடந்ததும், மூட நம்பிக்கைக்கு உள்ளாகாததும், அன்பையும்—ஒழுக்கத்தையும்–உயர்ந்த பண்புகளையும், ஜாதியாகவும் மதமாகவும்–கடவுளாகவும் கருதச் செய்யும் அரிய நூல் தான் குறள்.

*

பண்டிதரும் பாமரரும் போற்றும் திருவள்ளுவர்கூட ஒழுக்கம் ஒழுக்கம் என்று ஒழுக்கத்தைத்தானே போற்றி யிருக்கிறார். ஒழுக்கத்தில் உயர்ந்தவர்களைத்தான் திராவிடர் கள் கடவுளுக்கு மேலாகப் போற்றி யிருக்கிறார்கள்.

*

ஆரியப் பித்தலாட்டத்திற்கு சரியான மருந்து–மறுப்பு திருக்குறள்தான். இதை நான்மட்டுமே கூறவில்லை. திருவள்ளுவ மாலையிலேயே பல புலவர்கள் கூறியுள்ளார் கள். ஆரியப் புரட்டை வெளியாக்கி மடமையை போக்கும் நூலே திருக்குறள். எனவே, குறள் வழிபட்டு நீங்கள் புத்தறிவு பெற்று புது மனிதராகுங்கள்.

ஆரியப் பண்புகளுக்கு திராவிடநாடு ஆட்பட்டிருந்த சமயத்தில் திராவிடர்களை அதனின்று விடுவிக்க திராவிடப் பெரியார் ஒருவரால் தோற்றுவிக்கப்பட்ட நூல்தான் திருக்குறள் ஆகும்.

*

அறிவினால் உய்த்துணர்ந்து ஒப்புக்கொள்ளக்கூடியனவும் இயற்கையோடு விஞ்ஞானத்துக்கு ஒப்ப இயைந்திருக்கக் கூடியனவுமான கருத்துக்களையே கொண்டு இயங்குகிறது வள்ளுவர் குறள்.

*

கடவுள் வாழ்த்துக்கூட வள்ளுவர் ஒழுக்கத்தையும் அறிவையும் பற்றற்ற தன்மையையும்தான் கடவுளாகக் காட்டியுள்ளார். கடவுளை அறிஞன் என்கிறார். பிறப்பு, இறப்பு அறுத்தோன் என்கிறார். அவர் ஒரு இடத்திலாவது கடவுளை அயோக்கியனகவோ, ஒழுக்க ஈனம் உடையவனகவோ, வஞ்சகனகவோ, விபசாரியாகவோ சிருஷ்டித்திருக்கவில்லை.

*

குறளை ஊன்றிப் படிப்பவர்கள் எல்லோரும் நிச்சயம் சுய மரியாதை உணர்ச்சி பெறுவார்கள். அரசியல் ஞானம், சமூக ஞானம், பொருளாதார ஞானம் ஆகிய சகலமும் அதில் அடங்கியிருக்கின்றன.

*

குறளிலும் இன்றைய நிலைக்குப் புறம்பான கருத்துக்கள் சில இருக்கலாம். அவற்றை மாற்றிவிட வேண்டியதுதான். அத்தகைய மாற்றத்திற்கு இடம் தருவதுதான் குறள்.

மனுதர்ம சூத்திரங்களுக்கு நேர்மாறான கருத்துக்களைக் கொண்ட குறள் அடிகளை ஏராளமாகத் திருக்குறளிலிருந்து எடுத்துக் காட்டலாம்.

*

மனித சமுதாயத்திற்கே நல் வழிகாட்டி நன்னெறியூட்டி நற்பண்புகளையும் ஒழுக்கங்களையும் கற்பிக்கும் வகையில் எழுதப்பட்ட நூல்தான் திருக்குறள்.

*

குறள் இந்து மதக் கண்டன புத்தகம் என்பதையும் அது சர்வ மதத்திலுமுள்ள சத்துக்களை எல்லாம் சேர்த்து எழுதப்பட்டுள்ள மனித தர்ம நூல் என்பதையும் எல்லோரும் உணர வேண்டும்.

*

சுய அறிவே பிரதானம் என்ற "வாலறிவன் நற்றாள்" என்ற வள்ளுவர் கருத்துப்படி அனைவரும் நடக்க வேண்டும். உருவ வழிபாட்டை ஒதுக்கிவிடவேண்டும்.

*

கிருஸ்தவர்களாகி விட்டதாலேயே நீங்கள் உயர்ந்த வர்களென்று கருதிக்கொண்டு விடாதீர்கள். நீங்களும் குறள் மதக்காரர்கள். பைப்பிளுக்கு விரோதமாக குறளில் ஒன்றும் கிடையாது.

*

திராவிடர் கழகம் திருவள்ளுவர் குறளைப் பின்பற்றி நடந்துவரும் கழகம்.

*

திருவள்ளுவர் நூல் ஒன்றே போதும் இந்நாட்டு மக்களுக்கெல்லாம் அறிவை உண்டாக்க.

நமக்கு வேண்டிய முழு அறிவையும் கொடுக்கக் கூடியதாக ஒரு நூல் வேண்டுமானால் அது திருக்குறள் தான் என்பதை நீங்கள் உணருங்கள்.

*

என்னைப் பொறுத்த வரையில் திருக்குறளைச் சிறிதாவது ஆராய்ச்சி செய்தவன் என்று என்னால் கூறிக் கொள்ள முடியாவிட்டாலும், அதன் பெருமையை நான் ஓர் அளவுக்காவது உணர்ந்திருக்கின்றேன் என்பதையும், அதன்மீது எனக்கு அளவற்ற பற்றுண்டு என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

*

ராமாயணத்தில் 100 பாட்டும், பெரிய புராணத்தில் 200 பாட்டும் படிப்பதைக் காட்டிலும் திருக்குறளில் 10 பாட்டு படிப்பது எவ்வளவோ மேலாக இருக்கும்.

திராவிட கழகம்

ஆங்கிலேய ஆட்சியால் நம் கண்கள் சற்று திறக்கவே நமது இழிவை நாம் உணர்ந்து அதைப் போக்க முற்பட்டோம். இதுவரை யாரும் கனவில்கூட நினைத்திராத மகரிஷிகள்—ஞானிகள்—மற்றும் பல நாயன்மார்கள்—ஆழ்வார்கள் இவர்கள் யாரும் கூட செய்ய முற்படாத வேலையை நாம் துணிந்து ஏற்றுக்கொண்டிருக்கிறோம். திராவிடக் கழகம் அந்த வர்ணச்சிரம ஒழிப்புக்காகத்தான் இருந்து வருகிறதே ஒழிய, பட்டம் பெற அல்ல.

*

அறிவு வழிப்படி நின்று, அமைதி வழிப்படி நின்று, திராவிடக் கழகம் பொதுவுடைமை மலர்ச்சி காண விழைகிறது

*

அமைதி, உங்களைத் தாமதமாக — ஆனால் நிச்சயமாக வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லும்.

அமைதி குலையுமானால் அழியக் கூடியவர் நம் இனத் தவர்தான்; பார்ப்பனர்களல்ல என்ற உண்மையை நன்றாக உணருங்கள்.

*

பந்தயம் வேண்டுமானாலும் கட்டுவேன்: மத்திய அரசாங்கப் பிடியிலிருந்து திராவிடநாடு, தனி நாடாகப் பிரியாவிடில் சுதந்தரம் இல்லை — சோறு இல்லை — மான வாழ்வு இல்லை. இது உறுதி! உறுதி!! உறுதி!!

*

திராவிட கழகம் சமுதாய சம (தர்ம) நிலை ஏற்பட வேண்டுமென்று வேலை செய்கிறது.

*

திராவிடக் கழக விதை இன்று பரவாத இடமில்லை. திராவிடர்களில் திராவிட விதை பதியாத ஒரு உள்ளம் இல்லை.

*

திராவிடக் கழகத்தின் கூட்டம் ஜெயில் முத்திரை பெறுவதல்ல; உழைப்பு முத்திரை பெறுவதேயாகும். ஜெயில் முத்திரை தனிப்பட்டவருக்கே பயன்படும். உழைப்பு முத்திரை தனக்கு, கஷ்டம் தொல்லையைக் கொடுத்தாலும் மக்களுக்குப் பயன்படும்.

*

இன்றுகூட திராவிடன் புராண நாடகம் நடிக்கிறானென்றால், அவன் குலத்தால் ஐயப்பட வேண்டியவனாகத் தான் முடியும்.

மக்கள் அறியாமைப் படுகுழியில் வீழ்ந்து மாக்களாக வாழ்ந்து வருவதால், முதலாவதாக அம்மடமையை ஒழிக்க மக்களிடையே அறிவு வளர்ச்சி சம்மந்தமான பிரசாரத்தை திராவிடர் கழகம் செய்து வருகிறது.

*

மத சம்மந்தமான கடவுள் சம்மந்தமான விஷயங்களில் மக்களுக்கு தெளிவேற்படுத்தி அவர்களை ஒழுக்கம் உள்ளவர்களாக மான உணர்ச்சி உள்ளவர்களாக ஆக்குவதே திராவிட கழகக்கின் முக்ய கொள்கை.

*

எத்தனையோ மடாதிபதிகளின் உள்ளங்களைக்கூட மாற்றி விட்டிருக்கிறதே நம் திராவிடக் கழகத்தின் முயற்சி.

தீண்டாமை

வேதத்தை கொளுத்தவேண்டும் என்றேரும். தீண்டாதார் என்றெரு கூட்டத்தை ஒதுக்கி வைத்திருக்கும் சாமியை உடைத்து ரோட்டுக்கு ஜல்லி போடவேண்டும் என்றேரும். தீண்டாதார் என்ற இழிவைச் சுமத்தியிருக்கும் இந்து மதச் சாக்கடையை விட்டு வெளியேறி இஸ்லாம் மதத்தையோ, கிறிஸ்துவ மதத்தையோ தழுவுங்கள் என்றேரும். ஆயிரக் கணக்கில் மதமாற்றங்களைச் செய்தோம். காங்கிரஸ் அந்தச் சமயத்தில் தீண்டாதவர்களில் சிலரைத் தம் கூலிகளாக்கிக் கொண்டு நமக்கு எதிர்ப்பிரசாரம் செய்தனர். ஆனால், அச்சூழ்ச்சி பலிக்கவில்லை. முடிவில் கோவில் நுழைவுச் சட்டம் செய்தார்கள். செய்தும் பயனென்ன?

*

தீண்டாமை விலக்கென்று கூறி கோவில் திறந்து விட்டார்களே, இன்னும் பார்ப்பான்தானே மணியடித்து வருகிறான். தட்டில் விழுகிற காசு அவனுக்குத்தானே இன்னும் போய்க்கொண்டிருக்கிறது. கோவில்களில்

சாமிகளுக்கென்று அழப்படும் லட்சக்கணக்கான ரூபாய்களும் நம்மவர்களால்தானே தரப்படுகிறது. அது நம் மக்களையே சேரும்படியான வழி செய்யப்பட வேண்டாமா?

*

இந்து மதத்தில் கீழான ஜாதியாகக் கருதப்பட்டு வேறு மதத்தில் புகுந்த ஆதி திராவிடரின் நிலை, அங்கும் பழைய கருப்பனாகவே தானிருக்கிறது.

*

கீழ் ஜாதி என்பதற்கும் தொடக்கூடாதவர்கள் என்பதற்கும், மதத்தையோ கடவுளையோ கடவுள் செயலையோ சாஸ்திரத்தையோ காரணங் காட்டுவது வெறும் பித்தலாட்டம்.

பகுத்தறிவு

ஜீவப்பிராணிகளின் சிந்தனைசக்தியையும் சிந்திப்பதின் உணர்ச்சியையும்தான் அறிவு என்று சொல்லப்படுகிறது. அச் சிந்திக்கும் தன்மையின் கூர்மையே பகுத்தறிவு.

*

பகுத்தறிவில்லாத எந்த ஜீவராசியும் தன் இனத்தை வருத்தி வாழ்வதில்லை - கீழ்மைப்படுத்துவதில்லை - தன் இனத்தின் உழைப்பால் வாழ்வதில்லை; தன் இனத்தின் மீது சவாரி செய்வதில்லை; ஆனால் பகுத்தறிவுள்ள மனிதன் இத்தனையும் செய்யப் பின்வாங்கமாட்டான்.

*

சமுதாயத் துறையில் இன்றுள்ள வேற்றுமை பகைமை துவேஷம் இழிவு தரித்திரம் மடமை முதலிய குணங்கள், மனிதனின் அறிவுக்குறைவினால் - பகுத்தறிவில்லாததால் அல்லது, பகுத்தறிவைச் செவ்வனே பயன்படுத்தாதலால் ஏற்பட்டவையே யன்றி, காலக் கொடுமையாலோ, கடவுள் தன்மையாலோ அல்ல.

இயந்திரங்கள் எப்படி முதலாளி ஆதிக்கத்திற் குள்ளாகி உழைப்பாளிகளுக்கு இன்னல் தருகிறதோ, அதுபோலவே கவலையற்ற தன்மையை உண்டாக்கித் தீரவேண்டிய பகுத்தறிவும் சிலருடைய ஆதிக்கத்திற்கு அடிமையாகி மக்களுக்குத் துக்கத்தையும் கவலையையும் தரித்திரத்தையும் கொடுக்கப் பயன்பட்டு வருகிறது.

*

கடவுளும் கருமமுமே மனிதன் பகுத்தறிவைப் பாழ்படுத்தி, பகுத்தறிவற்ற ஜீவ ராசிகளோவிடக் கேவல மாக - துக்கரூபமாக - கவலைக்களஞ்சியமாக ஆக்கி விட்டது.

*

கடவுளுக்கும் கருமத்திற்கும் அடிமைப்பட்டவனிடம் பகுத்தறிவுள்ள ஒன்றுமே கிடையாது. தண்ணீர் அலையில் அலையும் மரக்கட்டை போன்றவனே யவன்.

*

விஞ்ஞானம் -அறிவு-தன்மான உணர்ச்சி இவை யின்றேல், பட்டம் பல பெற்றாலும், பணம் பல கோடி சேர்த்தாலும் பயன் இல்லை.

*

அந்நிய நாட்டினர் சந்திரமண்டலத்திற்கு சேதி யனுப்பிக் கொண்டிருக்க, நாம் செத்துப்போன தகப்பனுக்காக பார்ப்பானிடம் அரிசி பருப்பு அனுப்பி அழுதுகொண்டிருப்பது அறிவுடைமை யாகாது.

பார்ப்பனர்களுக்கு ஒன்று கூறுகின்றேன்: நீங்கள் கடவுள் – சாஸ்திரம் – மதம் மீது பழியைப்போட்டு நாட்டுக்குரிய, நாட்டை ஆண்ட எங்கள் இனத்தவர்களை, ஏமாற்றி பிழைத்ததை இந்த 1949-ம் ஆண்டோடு மூட்டை கட்டி வைத்துவிட்டு, பகுத்தறிவுக்கு இடம் கொடுங்கள்; மனிதத் தன்மையை வளருங்கள்.

*

நான் எனது 17-வது வயதிலேயே இந்தக் கடவுளர்களையும் இந்தப் பார்ப்பனர்களின் பித்தலாட்டங்களையும் எதிர்க்க ஆரம்பித்து விட்டேன். அதிலிருந்து இன்று வரைக்கும் சுமார் 53 ஆண்டுகளாக நானும் பகுத்தறிவுப் பிரசாரம் செய்து வருகிறேன். இதனால் நானென்ன செத்து விட்டேனா? அல்லது எனக்கு இழிவு ஏற்பட்டு விட்டதா இல்லையே. பின் ஏன் நீங்கள் பகுத்தறிவு வழி நடக்க அஞ்சுகிறீர்கள். அச்சம் விடுங்கள். அறிவு பெற்றெழுங்கள்.

சீர்திருத்தம்

சுயமரியாதைக் கல்யாணம் என்பது சில புதிய முறைகளைக் கொண்ட ஒருவித சீர்திருத்தத் திருமணம்.

*

பாமர ஜனங்கள் கல்யாணம் என்றால், வேலைக்கு ஆள் வைப்பது போலக் கருதுகிறார்கள்; புருஷனும் அப்படியே நினைக்கிறான்; புருஷன் வீட்டாரும் தங்கள் வீட்டு வேலைக்கு ஒரு பெண் கொண்டுவருவதாக கருதுகிறார்கள்; பெண் வீட்டாரும் வீட்டு வேலைக்கே தயார் செய்து தங்கள் பெண்ணை விற்றுக் கொடுக்கிறார்கள்.

*

கல்யாணம் என்பது ஆணும் பெண்ணும் கூடி இயற்கை இன்பம் நுகரவும், வாழ்க்கையில் ஏற்படும் சிரமத்துக்கு இளைப்பாறவும், ஆயாசம் தீர்க்கவுமே ஆணுக்கு ஓர் பெண்ணும் பெண்ணுக்கு ஓர் ஆணும் வேண்டியிருக்கிற தென்பதை பெரும்பாலோர் சிந்திப்பதில்லை.

கல்யாணம் மணமக்கள் எத்தனத்தினுலேயே ஆக வேண்டும்; பொருத்தம் பார்க்கும் பொறுப்பு மண மக்களுக்கே உரியது.

*

கல்யாண மில்லாத பெண்ணுக்கு மாத்திரம் சிறிதா வது சுதந்திரம் உண்டு என்று சொல்லலாமே ஒழிய, கல்யாண மானவள் அடிமையாகவே கருதப்படுகிருள்.

*

வாழ்க்கை ஒழுக்கத்தில் புருஷனுக்கு வேறு சட்டம் பெண்ணுக்கு வேறு சட்டம் இருக்கிறது. ஒழுக்கம் என் பதை எழுத்தில் சப்தத்தில் பார்க்கிறேமே ஒழிய, காரியத் தில் கையாள்வதில்லை.

*

பால்ய மணம் ஒழிந்து, கல்யாண ரத்து, விதவை மணம், சம உரிமை ஆகியவைகள் ஒரு சமூகத்தில் இருக்கு மானுல், இன்றுள்ள விபசாரங்களில் 100க்கு 90 பாகம் மறைந்து போகும்.

*

ஆண் எப்படி வேண்டுமானுலும் திரியலாம்; எத்தனை பெண்ஜாதிகளை வேண்டுமானுலும் மணக்கலாம் என்கிற முறையே விபசாரம் என்கிற பிள்ளையை வளர்க்கிறது.

*

உண்மையான சமூக சீர்திருத்தத்தை இன்று எந்த அரசியல் வாதியும் பொருளியல் வாதியும் ஒப்புக் கொள்ளவே மாட்டார்கள்.

கிராம சீர்திருத்தம் என்பது வீதி கட்டுவதும், பள்ளிக் கூடம் கட்டுவதும், பஜனை மடம் உண்டாக்குவதும் உத்சவங்கள் செய்விப்பது மாத்திர மல்ல.

*

நான் உலகத்தைக் கெடுப்பவனும். உலகத்தைக் கெடுப்பதால் எனக்கு என்ன பலன் ஏற்படும் என்று இவர்கள் கருதுகிறார்களோ தெரியவில்லை. அதுவும் 40 வருட காலமாகவா ஒருவன் உலகத்தைக் கெடுப்பதை வேலையாகக் கொண்டு பிரசாரம் செய்து வருவான். கொஞ்சமேனும் அறிவு கொண்டு சிந்திக்க வேண்டாமா இவர்கள்?

பொருளாதாரம்

கதர்த்திட்டம் பொருளாதாரத்திலோ, அரசியலிலோ, "ஆத்மார்த்தத்திலோ," தொழில் முறையிலோ, ஏழை மக்களுக்கு – இந்தியப் பொருளாதாரத்துக்கு ஒரு அம்மன் காசு அளவாவது பலன் கொடுத்திருக்கிறதா என்பதை யோசிக்கவேண்டியது அறிவுடையோர் கடமை.

*

"அவனவனுக்கு வேண்டியது அனைத்தையும் அவனவனே செய்துகொள்ளக் கூடிய சக்தியை அடைய வேண்டு" மென்பது, ஆதியில் மனித சமூகம் காடுகளிலும் பொந்துகளிலும் காட்டுமிராண்டிகளாய்த் திரிந்தகாலத்தில் சாத்தியப்பட்டிருக்கும்.

*

இந்திய பாமர மக்களின் அறிவுக்கு அவர்களது சடங்கு, ஆசாரம், ராமாயணம், பாரதம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், ஆகிய வற்றில் உள்ள நம்பிக்கை எப்படி அளவு கருவியாயிருக்கின்றதோ, அதே போலத்தான் இந்திய மக்கள் பொருளாதார — அரசியல் ஞானத்துக்கும் அவர்களது கதர்த்தத்துவம் அளவு கருவி.

மனித சமூகத்துக்குள்ள தரித்திரத்துக்குக் காரணம் செல்வவான்கள்; செல்வவான்களாக இல்லாவிட்டால், தரித்திரவான்கள் இல்லை.

*

லேவாதேவி என்பது மிகக் கொடுமையான தொழில். அதற்கு வேறு பெயர் சொல்லவேண்டுமானால், சட்டப் படிக் கொடுமைப்படுத்திக் கொள்ளையடிப்பது.

*

கூட்டுறவு என்கிற உயரிய — சரியான நிலையானது நம் நாட்டில் ஏற்பட்டால், ஜன சமூகம் கவலையற்று — சஞ்சல மற்று — நாளைக்கென் செய்வோம் என்ற ஏக்கமற்று நிம்மதியாக சவுக்கியமாக குதூகலமாக வாழ வழி ஏற்படும்.

*

ஆதிக்கத்திற்கும் ஆதிக்கக்காரனுக்கும் கொஞ்சமாவது இடமிருக்கிற வரையில், தொல்லையும் தொல்லைப்படுகிறவர்களும், தரித்திரமும், ஏழ்மையும் இந் நாட்டில் இருக்கத்தான் செய்யும்.

*

நமது நாட்டுக் கோவில் பணமும் வருமானமும், மடங்கள் பணமும் வரும்படியும் எல்லாம் ஒன்றுசேர்த்து தொழிற்சாலைகள் கட்டினால்; இந்தியாவில் பிச்சைக்காரனே — தற்குறியே — இழிவான மகனே ஒருவன் கூட இல்லாமல் எல்லோரும் சரி நிகர் சமானமான மனிதர்களாகவே காணப்படுவர்.

*

$3\frac{3}{4}$ வெள்ளையன் வெளியேறி விட்டான் என்று பெருமை பேசிக்கொள்ளும் அதே சமயத்தில், $21\frac{3}{4}$

மார்வாடி – குஜராத்தி – பனியா முதலிய வட நாட்டான் வந்து குவிந்துவிட்டானே. சர்வத்தையும் கொள்ளை கொள்ளுகிறான். இந்த வடநாட்டான் கொள்கையைப் பார்க்கும்போது, நாம் பார்ப்பானைக்கூட மறந்துவிட வேண்டியிருக்கிறது.

*

பார்ப்பான் ஏமாற்றிப் பணம் பறித்தாலும், அவன் அதை இங்கேயே செலவழித்துக்கொண்டு இங்கேயே சாகப்போகிறான். இந்த வட நாட்டவர்கள் அப்படியில்லையே. சந்தர்ப்பம் வரும்போது அகப்பட்டவரையில் பொன் — வெள்ளி முதல் பித்தளை ஈயம் வரை உருண்டையாகச் செய்து மூட்டை கட்டிக்கொண்டு, இரண்டாயிரம் மைலுக் கப்பால் ஓடுபவர்கள்தானே?

*

காரமசால் மிக்சர் வண்டி தள்ளிக்கொண்டு வரும் மார்வாடி, எண்ணி சில வருடங்களில் பங்களா கட்டிக் கொண்டு சேட்ஜியாக — சவுக்காராக — பாங்கராக மாறி விடுகிறான்.

*

"ரகுபதிராகவ ராஜாராம்" என்று பாடிக்கொண்டு வரும் அழுக்குப்பிடித்த வட நாட்டானுக்கு சவுக்கார்ப் பேட்டையில் 3 அடுக்கு மாடிக்கட்டிடம் சலவைக்கல்லால். அவன் வாழும் இடத்துக்கு சவுக்கார்பேட்டை; நாம் இருக்கும் இடத்துக்கு சேரி — குச்சு — தோப்பு — குப்பமா பெயர்?

ஆரியம்

ஜாதி பேதாபேதமும் மோட்ச நரகப் பித்தலாட்டமும் தவிர்த்த வேறு என்ன யோக்கியமான—நாணயமான கொள்கை ஆரியத்தில் புதைந்து கிடக்கிறது?

*

"நீங்கள் எங்களோடு ஒன்றுபடாவிட்டாலும், நாசமாய்ப் போங்கள்; எங்களுக்குள்ளாவது ஒற்றுமை ஏற்பட்டு வருவதைத் தடை செய்யாதீர்கள்." என்றுதான் பார்ப்பனர்களைப் பார்த்து வேண்டிக்கொள்ளுகிறோம்.

*

பார்ப்பனர்கள் எந்த நாளைக்கும் உயர்ந்தவர்களாகவே வாழ்ந்துகொண்டிருக்கமுடியாது; காலம் மாறிவிட்டது; சற்று இறங்கிவர வேண்டியதுதான். அப்போதுதான் அவர்கள் தம் மனிதத் தன்மையைக் காப்பாற்றிக் கொண்டவர்களாவார்கள். இன்றேல், பலவந்தமாக ஒரு காலத்தில் அந்த உயர்தன்மையிலிருந்து கீழே இறக்கப்படுவார்கள். ஆனால், பலாத்காரத்தில் அல்ல; நேர்மையான சட்டத்தின் மூலம்.

இந் நாட்டிற்கு பார்ப்பனர் வந்தது முதற்கொண்டு யாரோ ஒரிருவர்தான் "பார்ப்பனர் ஏன்? சூத்திரன் ஏன்? என்று கேட்டிருப்பார்கள். ஆனால், அவர்கள் மறைக்கப்பட்டுப் போனார்கள். அதே காரணத்தினால் வள்ளுவர் கபிலர் போன்ற அறிவாளிகள்தான் பிறப்பில் ஏது வித்யாசம் என்று சூளுரை கூறினார்கள். பார்ப்பனர்களால் அவர்களை எதிர்க்க முடியவில்லை. அதனால், அவர்களை, அவர்களின் கூற்றுக்களை விளம்பரம் இன்றி மறைத்துவைத்து விட்டார்கள்.

*

எதிர்த்துப் பேச ஆளின்றியே இது காலம்வரை ஆரியம் இந் நாட்டில் தழைத்தோங்கி நம்மை மலத்திலும் கேவலமான மானிடப் பிண்டங்களாகப் பார்ப்பனர்களால் மதிக்கும்படியான நிலைக்குக் கொண்டுவந்து விட்டது.

*

ரேடியோக்களும் ஆகாய விமானங்களும், தோன்றியுள்ள இந்த அற்புத விஞ்ஞானக் காலத்திலும், நாம் ஆரிய அன்னக்காவடி பார்ப்பானுக்கு அடிமையாயிருப்பதா?

*

ஆரியத்தின் அழியாச் சின்னங்களாக யிருந்துவரும் குழிக்கல் சாமிகள் அத்தனையும்; இந்நாட்டில் மடமையை வளர்க்கும் பொக்கிஷங்களாக இருந்துவரும் வேதங்கள், உபநிஷத்துக்கள் மனுநீதி நூல்கள், இராமாயணங்கள், கீதைகள், பாரதங்கள் அத்தனையும் இந் நாட்டின் எல்லைக்கப்பால் துரத்தியடிக்கப்படும்.

*

பார்ப்பன ஜாதியில் பிறந்துவிட்டதாலேயே அவர்களை வெறுக்கும்படி நான் எப்போதும் பேசியதில்லை.

நம் வீட்டில் பெண் இருந்தால், அப்பெண்ணை நம் வீட்டுக்கு வந்து ஒருவன் கேட்கவேண்டும்; இல்லாவிட்டால் கன்னியாகவே கூட இருக்க விட்டு விடுவோம். பார்ப்பனர்கள் வீட்டில் பெண் இருந்தால், அவன் ஆண் இருக்கிற வீடுகளுக்குப் போய்த்தான் "உனக்கு வேண்டுமா? உனக்கு வேண்டுமா?" என்று கேட்கவேண்டும். இதுதான் திராவிட தர்மம்—ஆரியதர்மம்.

*

காங்கிரஸ் தலைவர் பார்ப்பனர், சோஷலிஸ்டு கட்சித் தலைவர் பார்ப்பனர், கம்யூனிஸ்ட்டு கட்சித் தலைவர் பார்ப்பனர், இந்துமகாசபை தலைவர் பார்ப்பனர், ஆர். எஸ். எஸ். கட்சித் தலைவர் பார்ப்பனர், தொழிலாளர் சம்மேளனத் தலைவர் பார்ப்பனர், இந்திய சர்க்கார் பிரசிடெண்ட் பார்ப்பனர்; இவர்கள் யாவரும் அந்தரங்கத்தில் ஒன்றுதான்.

*

காலட்சேபக் கூட்டத்திற்கு பெண்கள் அதிகம் போவதால், காமக்கற்பனை மூலமே பார்ப்பனீயம்—மூட நம்பிக்கை—ஒழுக்கக்கேடு புகுத்தப்பட்டு விடுகிறது.

*

மடமையை மக்கள் சமுதாயத்திலே பரப்பி ஏமாற்றிப் பிழைத்துவந்த கூட்டத்தினர்மீது அவர்களால் கற்பிக்கப்பட்ட கடவுள்—ஜாதி—மதம்—புராணம்—இதிகாசங்கள் மீது இன்று மக்களுக்கு அவ்வளவு வெறுப்புணர்ச்சி ஏற்பட்டுவிட்டது என்பதை பார்ப்பனீயத்தை ஆயுதமாகக் கொண்ட ஒவ்வொருவரும் உணர்ந்து விரைவில் தங்களைத் திருத்திக்கொள்ள வேண்டுகிறேன்.

தம்மை உயர்ந்தவர்களாக மதிக்கவேண்டும் என்று விரும்புவதற்கு ஏதேனும் காரணமாவது காட்டவேண்டுமே? பட்டத்தில் பார்ப்பான் என்று கூறிக்கொள்ளுகிறார்களே ஒழிய, வேறெந்த விதத்தில் நம்மைவிட உயர்நடப்பு உடையவர்கள்? எந்தத் தொழிலைத்தான் இவர்கள் செய்யாமலிருக்கிறார்கள். எந்தப் பண்டத்தைத்தான் இவர்கள் தின்னமலிருக்கிறார்கள்.

*

மக்களுக்குள் பேதாபேதம் கூடாது—அனைவரும் சமமாகப் பழகவேண்டும் என்ற தத்துவத்தை ஒட்டி; பார்ப்பனர்கள் தம் ஆணவத்தை விட்டுவிட வேண்டும்—மூடநம்பிக்கையை விட்டுவிடவேண்டும் என்றெல்லாம் சமுதாய நன்மை கருதி நான் கூறிவருவதை 'ஹிந்து'வும் 'மித்திர'னும் பார்ப்பனர்களே துவேஷிப்பதாகத் திரித்துக் கூறி மித்ரபேதம் செய்து வருமானால், அதற்கு நான் எப்படி பொறுப்பாளியாக முடியும்?

மதராஸ் ரிப்பன் பிரஸ்,
புதுக்கோட்டை